விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்துநான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 31 ஞாயிற்றுக்கிழமை (13.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 146


ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஆலயத்துள் நாசம் செய்த திருடர்கள் நகைகளையும் கொள்ளையிட்டனர்

### கொக்குவிலில் சம்பவம் ; இந்துக்கள் அதிர்ச்சி



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள இரு ஆலயங்களில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதோடு ஆலயத்தின் தூய்மைக்கு பங்கம் விளைவிக்கும் நாசகாரச் செயல்களும் இடம்பெற்றுள்ளன.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவில் பொற்பதி (24ஆம் பக்கம் பார்க்க)

## பசிலுடன் நெருக்கமாகும் ஆளுநங்கட்சி அமைச்சர்கள்

(கொழும்பு)

படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் புறக்கணிக்கப்பட்டு வரும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் நெருக்கமாகிவருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கோத்தபாய ராஜபக்ஷ தமக்கு எதிராக மேற்கொண்டுவரும் (02ஆம் பக்கம் பார்க்க)



# பீரிஸ் தலைமையிலான குழு இன்று வாஷிங்டனுக்கு பயணம்

## அமெரிக்காவின் எதிர்பார்ப்பு சாதகமாகுமாம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்திற்கு பொறுப்புக் கூறக்கூடிய வகையிலான முழுமையான செயற்றிட்ட வரைபினை அமெரிக்கா எதிர்பார்க்கின்ற நிலையில், அதனை ஈடுசெய்யும் வகையிலேயே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் வாஷிங்டன் பயணம் அமையும் என தெரியவருகின்றது. (23ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வந்தவருக்கு மூளை மலேரியா

(யாழ்ப்பாணம்)

தென்னாபிரிக்க நாட்டிலிருந்து யாழிற்கு வந்த குடும்பஸ்தர் ஒருவருக்கு மூளை மலேரியாத் தொற்று இருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலையின் மலேரியா தடுப்பு பிரிவினரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளிற்கு சட்டவிரோதமாக செல்வதற்காக வெளிநாட்டு முகவர்களினால் அழைத்து செல்லப்பட்டு தென்னாபிரிக்க நாடுகளில் கைவிடப்பட்டவர்களில் ஒருவருக்கே இம் மலேரியாத் தொற்று இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முகவர்களினால் தென்னாபிரிக்க நாடுகளில் கைவிடப்பட்ட இலங்கையர்களில் (23ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கைதான 21பேர் விடுதலை!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மாத இறுதியின் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

பெண்கள் உட்பட இந்த சந்தேக நபர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு. பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. (23ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் எழுச்சி கொண்டால் அரசை மாற்ற முடியும்!

### ரணில் ஆலோசனை

(மட்டக்களப்பு)

மக்கள் எழுச்சியினால் தான் அரசாங்கத்தை மாற்ற முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதேச முக்கியஸ்தர்களுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அரசரட்ணம் சசிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த சந்திப்பிலேயே எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

இந்த அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் எழுச்சியடைய வேண்டும். அப்போது தான் அரசாங்கத்தை மாற்ற முடியும். அரசாங்கத்தை மாற்றும் நேரம் தற்போது வந்துள்ளது. இதை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும். ஐக்கிய தேசிய (23ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப்பொருள் வெடித்து சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கிடங்கில் கிடந்த மர்மப் பொருள் வெடித்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சாவகச்சேரி சரசாலை மத்தியை சேர்ந்த எஸ்.கிருசோபன் (வயது 8) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார். (23ஆம் பக்கம் பார்க்க)

சமையல் பிரியர்களுக்கு ஓர் நற்செய்தி

சமையல் பிரியர்களுக்கு சிங்கர் நிறுவனம் வழங்கும் சமையலறை உபகரணங்களின் இலகு பாவனை முறையும் சிற்றுண்டிகள் தயாரிப்பு முறையும்

இடம் : கிறீன் கிறாஸ் விடுதி, (Green Grass Hotel) ஆசீர்வாதம் வீதி, யாழ்ப்பாணம்
( புகையிரத நிலைய வீதி அருகாமையில் )

காலம் :16.05.2012 புதன்கிழமை மு.ப 9.30 தொடக்கம் பி.ப 12.30 வரை

சமையல் கலை மாணவர்களும் ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுள்ளது. தொடர்பு:-0772222562

◆ அனுமதி முற்றிலும் இலவசம்!








# வேலையாட்கள் தேவை

1. யாழ்ப்பாண முறையில் சமையல் சமைக்க தெரிந்தவர்கள் தேவை. (ஆண்,பெண்-இருபாலாரும்) (சைனிஸ் முறையில் சமைக்கத் தெரிந்திருந்தால் விரும்பத்தக்கது)
2. வரவேற்பாளர் (பெண்)
3. தோட்டப்பராமரிப்பாளர் தேவை.



BRIGHT INN

இல.51, சிவன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தொ.பே:-0212221889
0214922334

(C-6589)



## Study in INDIA

### VISVODAYA Engineering College

Courses Offered:

- ECE - Electronics & Communication Eng.
- CSE - Computer Science Eng.
- IT - Information Technology
- EEE - Electrical & Electronics Eng.
- ME - Mechanical Engineering
- CIVIL - Civil Engineering

(C-6582)



Qualification A/L-Maths 3 Passes

NO DONATION

FEES PAYMENT DIRECTLY TO THE COLLEGE AFTER THE SELECTION

- Four years Studies
- Three times food and accommodation
- Air-condition Hostel and transport from Hostel to College.
- (Separate hostels for boys and girls)

Forward Your CV at:chec.usr@gmail.com
Formalities befor June end 2012

Contact No : 0779265447



## படிவம்

தமிழ் மொழிப் பட்டதாரி
ஆசிரியர்களுக்கான விண்ணப்பப் படிவம்

பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் ஏனைய பிரபல்யமான புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

எஞானம்ஸ் பிறிண்டேர்ஸ்
கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.
0777164613

(8450)

முடிவுத் திகதி: 15.05.2012



## பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில்

### பாரதியார் பல்கலைக்கழக ஊடக பட்டப்படிப்பு

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்று B. Sc. (Visual Communication) P.G. Diploma (Communicative English) M.A. (Journalism & Mass Communication) ஆகிய கற்கைநெறிகளை யூன் 2012இல் ஆரம்பிக் கவுள்ளது.

கல்வி கற்போர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் தொடர்புகொள்ளவும்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்
இல.891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 6085


## பசிலுடன் நெருக்க...

நடவடிக்கைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவே அவர்கள் பசில் ராஜபக்ஷவுடன் நெருக்கமாகி வருவதாக கூறப்படுகின்றது. அத்துடன் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக அணி திரண்டு வருபவர்களில் அமைச்சர் மேர்வின் டி சில்வா, பிரதியமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே, நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால முக்கியமானவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் அரசியல் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் ஆகியவற்றில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கே கோத்தபாய ராஜபக்ஷ முன்னுரிமை கொடுத்து வந்தார்.

இதனால் அமைச்சர்களான விமல் வீரவன்ச, சுசில் பிரேமஜெயந்த, ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் கொழும்பு அரசியலிலிருந்து புறந்தள்ளப்பட்டிருந்த நிலையில் இவர்களும் பசில் ராஜபக்ஷவுடன் நெருக்கமாக செயற்பட்டுவருவதாக கூறப்படுகின்றது.

அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவுக்கு பிரதியமைச்சர் பதவியொன்றை வழங்குமாறு பசில் ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சாதகமாக பரிசீலிக்கவில்லை எனவும் தெரியவருகின்றது. (எ-1)


## சிங்கள, ஆங்கில வகுப்புகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.

தொழில் புரிபவர்களுக்கு விசேட நேரம் வழங்கப்படும்
(குறைந்த, இலகு தவணைக் கட்டண முறை)

North Lead Educational Center
No-328, Stanly Road, Jaffna.
Tel : 222 4459, 0772533390. Fax : 222 4460



## செல்லா சினிமா-யாழ்ப்பாணம்

தனுஷ், ஸ்ருதிஹாசன்
பிரபுமற்றும் பலர் நடித்த



3

DTS

10.30, 02.30, 06.30.

(C-6210)



## YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
ஏழு நாட்களும் மு.ப/ பி.ப வகுப்புகள் உண்டு

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பிட அனுசரணை

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்

(8284)



# BCBS CAMPUS

BCBS Campus

320,2nd floor, R.A. De Mel Mawatha,
Colombo-3.

- Ireland இல் கல்வி & வேலைவாய்ப்பு இரண்டையும் ஒரே நேரத்தில் தொடரவும், அத்துடன் குடும்ப விசா அனுமதியைம் பெறமுடியும்(IELTSதகைமை தேவையில்லை)
- UK இல் கல்வி வேலைவாய்ப்பு விசாக்களை பெறமுடியும்.

Degree & MBA Programs From UK Universities to Complete While Sri Lanka migration to Canada, Australia & Newzealand.

France Visa Can be Arranged

May 20 க்கு முன் பதிவுகளை மேற்கொண்டு இலவச விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளுங்கள்

அழையுங்கள்:-

077 109 7997 - Nivetha (தமிழ்மொழி மூலம்)

(C-6593)

# க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கு அ.அட்டை வழங்க விசேட திட்டம்

இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் அநாவசியமான அழுத்தங்களுக்கு உள்ளாவதை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அதிபர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களை தெளிவூட்டும் வகையில் சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களில் இந்த வருடம் ஒக்டோபர் 31 ஆம் திகதி 16 வயது பூர்த்தியாகும் அனைவரும் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது பிறந்த மாதத்திற்கு அமைவாக வெவ்வேறாக கோவைகளை சமர்ப்பிக்குமாறு ஆட்பதிவு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 31 ஆம் திகதி 16 வயது பூர்த்தியாகாத பரீட்சார்த்திகளுக்கு தபால் அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஏதேனும் பிரச்சினை இருப்பின் 0112 583 122 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# நள்ளிரவில் சந்தேகத்திற்கிடமாக நடமாடுவோர் கைது செய்யப்படுவர்

## யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

நள்ளிரவு வேளைகளில் காரணமில்லாது நடமாடுவோர் பொலிஸாரினால் கைது செய்யப்படுவர் என யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் குகனேசன் தெரிவித்தார்.

அவரது காரியாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்செயல்முறை காரணமாக இவ்வாரத்தில் மட்டும் கொடிகாமம் பொலிஸாரினால் 4பேரும் கோப்பாய் பொலிஸாரினால் 6 பேரும் சுன்னாகத்தில் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 13 பேரும் நள்ளிரவு 12.30 மணியளவில் வீதிகளில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய போதே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் உடனடி விசாரணைக்கு உட்படுத்தியபோது தம்மை அடையாளப்படுத்தும் அடையாள அட்டை உட்பட எவ்வித ஆவணங்களும் வைத்திருக்கவில்லை. இதனால் 13 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர்.

18 வயதினை அடையும் முன்னர் தாமாக விரும்பி காதல் திருமணம் செய்து கொண்டாலும் திருமணம் செய்பவர் மீது ஆட் கடத்தல், பலாத்கார வன்புணர்வு என்ற பிரிவுகளில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும்.

மேலும் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 பேரும் கைது செய்யப்பட்டு உள்ளனர். அத்துடன் வீதிகளில் குப்பைகள் கொட்டுவோர் மீது இனி கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு அவர்களுக்கு பொது மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 15 ஆவது ஆண்டு மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் மாலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை மின்னொளியில் நடைபெற்று வருவதாக செயலாளர் க.ஜினதாஸ் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் இரவு 7 மணிக்கு கைதடி குமரநகர் விளையாட்டுக் கழக(பி) அணியை எதிர் த்து இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக அணியும் விளையாடவுள்ளது. (அ-9)

# வாரம் ஒரு தகவல்

## விஞ்ஞான வியாபாரம்!

“நாட்டின் நிர்வாகத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது”

“என்ன சொல்கிறீர்கள்?”

“தற்போதைய வைத்தியர்களே சிறுநீரகத்தை வெட்டி எடுத்து வியாபாரம் செய்கின்ற அளவிற்கு உலகம் மாறிவிட்டது என்றால் மிகுதி கதையைக் கேட்கவா வேண்டும்”

“ஒரு சிலரது அப்படிப்பட்ட செயற்பாட்டினால் மொத்தமாக உள்ள அனைவரையும் அப்படியாக நினைக்கக்கூடாது”

“உயிரைக் காப்பாற்ற வேண்டிய மருத்துவ விஞ்ஞானம் இப்படியா மாற வேண்டும்?”

“உலகத்தில் முதல் முறையாக நுரையீரல் அறுவைச் சிகிச்சை அமெரிக்காவிலேதான் நடந்திருக்கின்றது. அது தெரியுமா உங்களுக்கு?”

“எப்படி அது?”

“வயது 22 உடைய பெண்ணுக்கு நுரையீரல் கோளாறு ஏற்பட்டது. அந்த நோய் ஏற்பட்டவர்கள் 30 வயதிலே இறந்து விடுவார்கள் என்று கூறப்படுகிறது. அது ஒரு பரம்பரை நோயாகும். லொஸ் ஏஞ்சலீஸ் மருத்துவ மனையிலே அந்தப் பெண்ணை அனுமதித்திருந்தார்கள். அந்தப் பெண்ணினுடைய அம்மா பார்பரா... வயது49. அப்பா ஜேம்ஸ்... வயது 53. இவர்களின் நுரையீரல்களிலேயிருந்து சிறிதளவு வெட்டியெடுத்து மகளுக்கு பொருத்தினார்கள். அந்தப் பெண் உயிர் பிழைத்துக் கொண்டாள்”

“பரவாயில்லையே...”

“உயிரைக் காப்பாற்றுகின்ற கடைசி முயற்சியாகத்தான் இதைச் செய்திருக்கிறார்கள். இது ஓர் உலக சாதனையாகும்”

“ஆக அந்தப் பெண் இன்றைக்கு உயிருடன் இருப்பதற்குக் காரணமே அந்த வைத்தியர்கள்தான்”

“அதிலே என்ன சந்தேகம்?”

“நான்கூட இன்றைக்கு உயிருடன் இருப்பதற்கு காரணமே எங்களுடைய ஊரிலே இருக்கின்ற ஒரு வைத்தியர்தான்”

“அப்படியா?”

“ஆமாம். கடந்த வாரம் திடீரென்று எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுவிட்டது. உடனே அவரிடம் தான் போனேன்”

“அதன் பின்னர்?”

“நல்லவேளை... அவர் அன்றைக்கு ஊரிலே இல்லை”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

13.05.2012
(சித்திரை 31, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
அட்டமி முன்னிரவு 8.40 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 11.24 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53 மணிவரை
சுபநேரம் 8.53-10.23 மணிவரை

**மேடம்** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்,புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, திடீர் பயணங்களால் ஆதாயமுண்டு.

**கடகம்** வழிபாட்டால் சங்கடங்கள் தீர வேண்டிய நாள், விலையுயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது, உடல் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, போசன சுகமுண்டு.

**சிங்கம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள்,பயணத்தால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் கிடைக்கலாம், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**கன்னி** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள்,தொலைபேசி வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரலாம்,பல நாட்களாக வசூலாகாமல் இருந்த பாக்கிகள் வசூலாகலாம்.

**துலாம்** வளர்ச்சி கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** உறவினர் வருகையுண்டு, சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், விலையுயர்ந்த பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கை கொடுத்து உதவுவர், வியாபார விரோதம் விலகும்.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பண வரவு திருப்தி தரும், வாக்கு மேன்மையால் பிறரைக் கவர்வீர்கள்.

**கும்பம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், ஒரு வேலைகளை முடிக்க பல மணிநேரம் காத்திருக்க நேரிடலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்** தொழிலில் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்,ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்,சுப செலவுகள் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும்.


வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 40 | 50 |
| தக்காளி | 110 | 160 | 110 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 50 | 40 | 40 | 40 |
| கரட் | 45 | 60 | 50 | 60 |
| பூசணி | 30 | 20 | 25 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 15-20 | 20 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-70 | 40-70 | 90 | 50-70 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 100 | 90 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 80 | 70 |
| பயற்றங்காய் | 60 | 70 | 70 | 40 |
| லீக்ஸ் | 100 | 110 | 90 | 140 |
| பீற்றூட் | -- | 70 | -- | 60 |
| கறிமிளகாய் | 60 | 60 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 180 | 300 | 200 |
| போஞ்சி | 100 | 140 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | 90 | -- |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 110 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 | 15-18 |







மலேரியா அற்ற இலங்கை 2014 என்னும் தொனிப்பொருளில் மலேரியா விழிப்புணர்வு நடைப்பேரணியும் மலேரியா விழிப்புணர்வுக் கண்காட்சியும் நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முன்பாக காலை 9.30 மணியளவில் ஆரம்பமான நடைப்பேரணி ஆஸ்பத்திரி வீதியூடாக கஸ்தூரியார் வீதியை வந்தடைந்து, பின்பு யாழ். இந்துக் கல்லூரி வரை தொடர்ந்தது. அங்கு மலேரியா விழிப்புணர்வுக் கண்காட்சி முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமானது. இந்த நடைப்பேரணியில் கலந்து கொண்டவர்களையும் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ மங்களவிளக்கேற்றி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச்செய்தியாளர்)

# முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம் வாருங்கள்

## கூட்டமைப்பு அழைப்பு

முள்ளிவாய்க்காலில் அமரத்துவம் எய்திய எமது உறவுகளுக்கான மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு,

எமது இறைமையை,வாழ்வுரிமையை அழித்தொழிக்கும் நோக்கில் மானுடமே வெட்கித்தலைகுனியுழ் அளவிற்கு எமது உறவுகள் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டு இன்றுடன் மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்னமும் அவர்களது இரத்த உறவுகள் அவர்களுக்கான ஈமக்கிரியைகளைச் செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

அன்றைய தினத்தை எமது உறவுகளுக்கான தினமாக ஏற்றுக்கொள்வோம். அனைவரின் அஞ்சலியும் அமரத்துவம் அடைந்தவர்களின் ஆன்மாக்களைப் புனிதப்படுத்தும். அவர்களது குடும்பத்தினருக்கு மன அமைதியையும் புதுத்தெம்பையும் கொடுக்கும்.

மரணித்தவர்கள் அனைவரது ஆத்மா சாந்தியடையவும் மரணித்தவர்களின் குடும்பங்கள் துயரங்கள் நீங்கி சுபீட்சமான வாழ்வை வாழவும் நாம் அனைவரும் கூட்டாக அஞ்சலி செலுத்த அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் என்றுள்ளது. (அ-266)

# நீதியமைச்சர் நேர்மையற்றவர்; நியாயம் கிடைப்பது எவ்வாறு?

## ரவி கருணாநாயக்க கேள்வி

(கொழும்பு)

ஐ.தே.க.வில் போட்டியிட்டு அரசு பக்கம் தாவிய நேர்மையற்ற ஒருவர் நீதி அமைச்சராகவிருக்கும் போது அவரிடமிருந்து நாம் எப்படி நீதியை எதிர்பார்க்க முடியுமென ஐ.தே.க. எம்.பி . ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் தான் கொண்டு வந்த தனிநபர் பிரேரணைக்கு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பதிலளித்து உரையாற்றியதைத் தொடர்ந்து அதற்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

ரவி கருணாநாயக்க மேலும் கூறியதாவது,

அஸ்வர் எம்.பி.க்கு முதுகெலும்பும் இல்லை. வாயும் இல்லை. இச்சபைக்குள் அவர் கூறியவற்றை வெளியே வந்து கூறுவராக இருந்தால் அதற்கு சரியான பதிலை வழங்க முடியும். எனது பிரேரணையை ஏற்க முடியாதென நீதி அமைச்சர் கூறுகின்றார்.

ஐ.தே.க.வில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் அரசு பக்கம் தாவி அமைச்சுப்பதவியை பெற்றுக்கொண்ட அவரிடமிருந்து எப்படி நாம் நீதியை எதிர்பார்க்க முடியும் என்றார். (அ-2)

# தமாராவைப் பழிவாங்கி நன்றி வெளிப்படுத்திய அரசு

## ஐக்கிய தேசியக் கட்சி கிண்டல்

(கொழும்பு)

இலங்கைக்காக தனித்துவமாகச் செயற்பட்ட தமரா குணநாயகத்திற்கு அரசு அவரின் பதவியைப் பறித்து அவமானப்படுத்தி தனது நன்றி உணர்வை வெளிப்படுத்தியுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரைநிகழ்த்துகையில்,

இந்த அரசு தனக்கு உதவி புரிபவர்களை பழி வாங்குவதையே கொள்கையாகக் கொண்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க பெரும் பங்காற்றியவர் மங்கள சமரவீர. அதன் பயனாக ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ சிறிது காலத்திற்குள்ளேயே மங்கல சமரவீரவின் அமைச்சர் பதவியை பறித்து பழி வாங்கினார்.

அதேபோன்று யுத்தத்தை வென்று கொடுத்த ஜெனரல் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்தார். தயான் ஜயதிலக்கவின் பதவியை பறித்து அவரையும் பழி வாங்கினார்.

மஹிந்தவின் வெற்றிக்கு பாடுபட்ட சோமவன்ச அமரசிங்க, ரிவ்வின் சில்வா போன்றோரை தாக்கினார்.

இப்போது ஐ.நா.வில் இலங்கைக்காக தனித்துவமாகச் செயற்பட்ட தமிழ்ப்பெண் மணியான தமரா குணநாயகத்தின் பதவியைப் பறித்து தனது நன்றிக் கடனை செலுத்தியுள்ளார். இது தான் இந்த ஜனாதிபதியின் நன்றி காட்டும் நடைமுறை.

(அ-2)

# அந்தணர் ஒன்றியக்கூட்டம்

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கற்குழியில் அமைந்துள்ள அந்தணர் ஒன்றிய தலைமை அலுவலகத்தில் சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் அந்தணர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-266)

# நோர்வேயில் உரையாற்ற தயாராகிறார் சுரேஷ்

(கொழும்பு)

நோர்வே பாராளுமன்றில் நடைபெறவுள்ள மாநாட்டில் உரையாற்றுவதற்கு தயாராகவுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நோர்வே பாராளுமன்றத்தில் நாளை மறுதினம் சுரேஸ் பிரேமச்சந்திரன் உரையாற்றவுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. நோர்வே பாராளுமன்ற பிரதி சபாநாயகர் தலைமையில் இந்நிகழ்வு இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது. யுத்தத்திற்கு பின்னரான இலங்கை என்னும் தொனிப்பொருளில் அவர் உரையாற்றவுள்ளார். (அ-2)

# மரமுந்திரிகைப் பழத்தை விற்பனை செய்வதில் சிக்கல்

## உதவி கோருகின்றனர் விவசாயிகள்

(மட்டக்களப்பு)

மரமுந்திரிகை பழத்தை விற்பனை செய்வதில் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதாக உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகை காலம் தற்போது ஆரம்பமாகியுள்ளதால் மட்டக்களப்பு கல்முனை வீதியில் அதன் விற்பனையாளர்களும் அதிகரித்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் இம்முறை 500 ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகை செய்கையிடப்பட்டுள்ளது.

எனினும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைந்த விளைச்சலே கிடைத்துள்ளதாக மரமுந்திரிகை செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் உற்பத்திக்கு பல்வேறு செலவுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் அதனால் பெறப்படும் வருமானம் மிகவும் குறைந்த நிலையிலேயே கிடைப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தினமும் பெறப்படும் முந்திரிகை பழத்தில் அரைவாசிக்கும் குறைவான பழமே விற்பனை செய்யப்படுவதாகவும் மீதி அழுகிய நிலையில் வீசப்படுவதாகவும் மரமுந்திரிகை விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மரமுந்திரிகை செய்கையில் ஈடுபடுவேரே அதிகளவில் அவற்றினை விற்பனை செய்வதையும் காணக்கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, வாகரை, கிரான், வவுணதீவு, பட்டிப்பளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிகமான இடங்களில் மரமுந்திரிகை செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இங்கு உற்பத்தி செய்யப்படும் மரமுந்திரிகை பழங்களை வெளி மாவட்டங்களுக்கு கொண்டு சென்று சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மரமுந்திரிகை செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-2)

# கல்லோயாவில் புதிய மணல் கண்டுபிடிப்பு

பொலனறுவை மாவட்டத்தில் கல்லோயா பிரதேசத்தில் புதிய மணல் வகையொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மணல் வகையொன்று கட்டடநிர்மாணத்துறைக்குப் பயன்படுத்த உகந்ததாக இருப்பதாக இலங்கை புவிச்சரிதவியல் மற்றும் அகழ்வாராய்ச்சிப்பணியகத் தலைவர் என். பி.விஜயானந்த குறிப்பிட்டுள்ளார்.

கட்டட நிர்மாண வேலைகளின் போது குறைந்த கட்டுப்பாட்டு விலையில் மணலை விநியோகிப்பதற்குப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மணல் வகை உதவும் என அவர் மேலும் தெரிவித்தார். மேலும் மன்னம்பிட்டிய, வில்கமுவ, ஹசலக்க மற்றும் திருகோணமலை போன்ற பிரதேசங்களிலும் புதிய மணல் வகைகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# புதிய யாழ்.வைத்தியசாலையில் புதிய லப்ரோஸ்கோப்பி

## சத்திர சிகிச்சை உபகரணங்கள் மூலம் சத்திரசிகிச்சை

இச் சிகிச்சையானது கத்தியின்றி, இரத்தமின்றி ஓர் சிறிய துவாரத்தினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இச்சத்திரசிகிச்சையின் பின் ஓரிரு நாட்களிலேயே நீங்கள் உங்கள் அன்றாடக் கடமைகளை செய்யலாம்



(SC-5968)

### லப்ரோஸ்கோப்பியினூடாகச் செய்யப்படும் சத்திரசிகிச்சைகளும் பரிசோதனைகளும்

1. கர்ப்பப்பையிலுள்ள சிறிய கட்டிகளை அகற்றல் (OVARIAN CYS TECTOMY)
2. அப்பென்டிசைட் சத்திரசிகிச்சை (APPENDISECTOMY)
3. கேணியா சத்திரசிகிச்சை (Hernia Surgery)(நெற் வைத்து செய்யப்படும்)
4. பித்தப்பை கல்லகற்றல் (CHOLECYSTECTOMY)
5. மலட்டுத்தன்மையைக் கண்டறியும் ஆய்வும் பரிசோதனைகளும் (Tubal Patencey Test)

- லப்ரோஸ்கோப்பினூடான சத்திரசிகிச்சைக்கான கட்டணம் அண்ணளவாக 90,000 முதல் 98,000 வரை.
- யாழ். போதனா வைத்தியசாலையில் லப்ரோஸ்கோப்பின் சத்திரசிகிச்சை நிபுணர்களான Dr.s.ராஜேந்திரா, Dr.v.சுதர்சன் ஆகியோருடன் மகப்பேற்று சத்திர சிகிச்சை நிபுணராலும் இச் சேவை வழங்கப்படுகிறது.
- யாழ் போதனாவைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர்களினாலும் வைத்திய நிபுணர்களினாலும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் வைத்திய நிபுணரின் வைத்திய ஆலோசனைகள் வியாழன்,ஞாயிறு ஆகிய தினங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

புதிய யாழ்.வைத்தியசாலை,
315, பலாலி வீதி,
பரமேஸ்வராசந்தி,
திருநெல்வேலி.

தொ.பே:-0212223533
0212221011
0777781003

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துங்கள் அல்லது சர்வதேச விசாரணை நடக்கும்

## லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி.எச்சரிக்கை



(கொழும்பு)

**நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தாவிடின் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் ஆரம்பமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

சர்வதேச பிரச்சினைகளுக்கு தேர்தல் தீர்வாகாது. ஐ.நாவுடன் விளையாடினால் இலங்கைக்கு எதிரான அடுத்த யோசனை படுபயங்கரமானதாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மனித உரிமை பேரவையில் 2006 ஆம் ஆண்டு முதல் உறுதிப்படுத்திய எதனையுமே அரசாங்கம் இதுவரையிலும் செய்யவில்லை.17 ஆவது திருத்தத்தை 2010 ஆம் ஆண்டு இரத்துச் செய்தீர்கள். அதனை நிறுவுமாறே ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

சர்வதேச பிரச்சினையை தீர்ப்பதற்காக தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றீர்கள். தேர்தல் சர்வதேச பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

படுகொலைகளை விசாரிக்குமாறு பொலிஸாரை பணித்துள்ளீர்கள். விசாரணை நியாயமானதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? விசாரணை சர்வதேச மட்டத்திற்கு அமைவாக நடைபெற வேண்டும்.

சர்வதேச சமூகத்திற்கு பொய்களை கூறியமையால் வெளிவிவகார அமைச்சர் மற்றும் மனித உரிமை அமைச்சர் ஆகியோர் முகம் சுளித்துக் கொண்டு நிற்கின்றனர்.

2006 ஆம் ஆண்டு ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக 94 பரிந்துரைகளே இருந்தன. இன்று அவை 96 பரிந்துரைகளாக அதிகரித்துள்ளன.

அதில் 17 ஆவது திருத்தம், ஊடக சுதந்திரம், மனித உரிமை, போரின் இறுதியில் நடந்தது என்ன? உள்ளிட்ட விடயங்களுக்கு பதிலளிக்க வேண்டும், செயற்பாட்டுத் திட்டத்தையும் அமுல்படுத்த வேண்டும்.

அமெரிக்காவுக்கு அரசாங்க குழு எதனை எடுத்து செல்கின்றது என்பதனை இந்த சபைக்கு 18 ஆம் திகதிக்கு முன்னர் தெளிவுபடுத்த வேண்டும். சர்வதேச பிரச்சினை சில்லறை பிரச்சினையல்ல.

அமெரிக்காவுக்கு கொண்டு செல்லும் அறிக்கையை விசேட சபையை கூட்டி விவாதிக்க வேண்டும் என்றார். (அ-2)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த காலஅவகாசம் தேவைப்படுகிறது

## பிரதிவெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்திற்கு சிறிது கால அவகாசம் தேவை. எனினும் அதனை முழுமையாக நிறைவேற்றுவதில் எந்தத் தங்கு தடையும் கிடையாது என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பியினால் கொண்டு வரப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தேசியக் கொடியை ஏந்தியமை தொடர்பில் சிலர் எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர். புலம் பெயர்ந்தவர்களின் பிரதிநிதிகளாக கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் செயற்படுகின்றனர். அரசாங்கத்தை பொறுத்தவரையில் வடக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் தீர்வினை பெற்றுக் கொடுப்பதே நோக்கமாகும். நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பல்வேறு விடயங்கள் தற்போது நடை முறையில் உள்ளன. ஆகவே, கொண்டு வரப்பட்டிருக்கும் பிரேரணையின் ஊடாக அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்படக் கூடாது.

முப்பது வருட கால யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்த அரசாங்கம் நாட்டில் நீடித்த சமாதானத்தை கொண்டு வருவதற்கே செயற்பட்டு வருகின்றது எனவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நீதிபதியை மாற்றுவதற்கு எதிராக மேன்முறையீடு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் சண்டே லீடர் பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மானநஷ்ட வழக்கை விசாரித்து வந்த நீதிபதியை மாற்றுவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு உயர்நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் ஏற்கப்பட்டது.

அத்துடன் இந்த மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு வரும்வரை இந்த மானநஷ்ட வழக்கு தொடர்பில் மாவட்ட நீதிமன்றின் சகல நடவடிக்கைகளையும் நிறுத்திவைக்கும்படி உயர்நீதிமன்றம் பணித்துள்ளது.

மேன்முறையீட்டாளராக சண்டே லீடர் சார்பில் எம்.ஏ.சுமந்திரனுடன் விரன் கொரயா, ஏமிஸா ரெகல், யுவானிற்றா அருளானந்தம் ஆகியோர் ஆஜராகினர். மனுதாரரான கோத்தபாய சார்பில் அலி சப்ரி ஆஜரானார். (அ-2)

# இலத்திரனியல் இலக்கங்களை களவாடி போலி கடனட்டை தயாரிப்பு

## புதுவித மோசடி அம்பலம்

(கொழும்பு)

வங்கி, நிதி நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கும் கடனட்டைகளின் இலத்திரனியல் இலக்கங்களை களவாடி போலி அட்டைகளை தயாரிக்கும் மோசடி தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு தகவல் கிடைத்துள்ளது.

வங்கிகளும் நிதிநிறுவனங்களும் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைப்பதற்காக அட்டைகளை கூரியர் சேவையிடம் ஒப்படைத்த பின்னர் அவை வாடிக்கையாளர்களின் கைகளில் சேர்வதற்கு முன்னரே இந்த மோசடி மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மோசடியுடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கூரியர் ஊழியர்களும் இதில் அடங்குகின்றனர்.

இவ்வாறு நிதி நிறுவனங்களினால் விநியோகிக்கப்பட்ட 25 கடனட்டைகளை இந்தக் கும்பல் போலியான முறையில் தயாரித்துள்ளதாகவும் இதன் மூலம் சுமார் 50 இலட்சம் ரூபா பணம் களவாடப்பட்டுள்ளதாகவும் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. (அ-2)


அன்பான வடமாகாண Nokia வாடிக்கையாளர்களே
NOKIA Connecting People
உங்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

Nokia நிறுவனம் வடமாகாணத்தில் காலடி வைத்ததை நினைத்து பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். நீங்கள் கடைகளில் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Nokia கையடக்கத் தொலைபேசியானது அசலானதா (Original) அல்லது நகல் ஆனதா(Dupplicate ) என்பதை நிரூபிப்பதற்கு அதின் உட்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள இமி இலக்கங்களை (IMEI Numbers ) ஐ வடமாகாணத்தின் Nokia கையடக்க தொலைபேசியின் வடபிராந்திய விநியோகஸ்தரான SVM TECHNOLOGY (PVT)LTD இல.158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு அறியமுடியும்.

**மேலதிக தகவல்களிற்கு எங்கள் யாழ்ப்பாண தொலைபேசி இலக்கங்களான:-0212220293, 0214925828, 0773659359, 0777716242 என்ற இலக்கங்களுடனும் வவுனியா பிரதேசமாயின் (வன்னி மாவட்டம்) 0773659360, 0772441681 என்ற இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டு அறியமுடியும்.**

எமது ஸ்ரீலங்கா (Srilanka ) ஏக விநியோகஸ்தரான Softlogic Communication (Pvt)Ltd இன் உயர் அதிகாரிகள் வடமாகாணத்தில் மேற்கொண்ட சந்தை ஆராட்சி மூலம் பின்வரும் போலி விற்பனையாளர்களை கண்டறிந்துள்ளனர். ஒரு சில வியாபாரிகள் Nokia கையடக்க தொலைபேசியின் அசல் (Original) உதிப்பாகங்களை மாற்றி (Battery, Charger, Headset,Memory card) போலியான உதிரிப்பாகங்களை அதனுள் பொருத்தி வாடிக்கையாளர்களிற்கு விற்பதனால் அந்த உதிப்பாகங்கள் 3 மாதங்களில் முற்றாக செயல் இழந்து விடுகிறது. ஆனால் அசல் Nokia (Original Nokia) உதிப்பாகங்கள் நீண்ட காலங்களிற்கு உழைக்கக் கூடியவை. இதனை உறுதி செய்ய மேலே குறிப்பிட்ட ஸ்தாபனத்துடன் தொடர்புகொள்ளவும். அவர்கள் அதனை இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழுவிற்கு அறிவிப்பார்கள்.


எமது Nokia வாடிக்கையாளர்களே நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கையடக்க தொலைபேசிக்கும் இலங்கையின் ஏக பிரதிநிதிகளான Softlogic Communication (Pvt)Ltd இனால் வழங்கப்படும் உத்தரவாத அட்டையை கேட்டு வாங்கி (Warrenty Card ) மிகவும் கவனமாக வைத்து இருந்தால் உங்களுக்கு என்ன பிரச்சினை வந்தாலும் உத்தரவாத அட்டை உங்கள் கையில் இருக்கும் வரை (Warrenty Card) உங்களுக்கு நாங்கள் அதற்குரிய அட்டையுடன் வந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

NOKIA Connecting People
ஏக பிரதிநிதி
Softlogic Communication (Pvt)Ltd
No 4, Defonseka Road,
Colombo-05
T.P:-0777264717

வட பிராந்திய விநியோகஸ்தரான
(சி/6053)

SVM TECHNOLOGY (PVT)LTD
158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல:-0212220293, 0214925828,

# அன்பை கொண்டாடுதல்



ஆன்மீகம் 53

### ஞாபக சக்தி

உங்களுடைய மறதி எனும் இயல்பு, வாழ்க்கையில் எல்லா பிரச்சினைகளுக்கும், துன்பங் களுக்கும் காரணமாகிறது. ஆனால், உங்களுடைய ஞாபகசக்தி எனும் மிகச்சரியான இயல்பு அதாவது தெய்வீகத்தன்மை உங்களுக்குச் சுதந்திரத்தை அளிக்கிறது. இங்கு ஞாபகசக்திதான் உங்கள் சிறந்த நண்பன்! ஞானத்தின் நோக்கமே உங்கள் இயற்கையான தன்மையை உங்களுக்கு நினைவுபடுத்துதல் தான்! பகவத்கீதையில் அர்ஜு ணன் கிருஸ்ணனிடம், “எனக்கு நினைவு வந்துவிட்டது. எனது உண்மை சொரூபத்தை நான் இப்பொழுது உணர்ந்து விட்டேன். சொல்வதுபோல் நான் செய்கிறேன்” என்றான்.



ஞாபகசக்தி என்பது ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதம் என்பதோடு மட்டுமின்றி உங்களது உண்மையான இயல்பை உணரவைக்கும் உண்மை யான நண்பனும்கூட! ஆனால் இனிமையானதோ அல்லது இனிமை யற்றதோ சம்பவங்களிலிருந்து, அதன் நினைவுகளில் இருந்து வெளிவராவிட்டால் தடையாகவும் இந்த ஞாபகசக்தி இருந்து விடு கிறது. இனிய நிகழ்ச்சிகள் மனதில் அகலாமல் இருந்து கொண்டே தீவிர ஆசைகளையும், போட்டி களையும் ஏற்படுத்தி விடுகின்றன. இதன் காரணமாக புதிய அனுபவங் களையும் உள்வாங்க இடங் கொடுப்பதில்லை. இனிமையற்ற நிகழ்ச்சிகளோ, நியாயமற்ற ஒரு தலைப்பட்சமான அறிந்து கொள் ளலை ஏற்படுத்தி விடுகின்றது. எனவே, ஞாபகசக்தி வரப்பிரசாத மாகவும் மற்றும் தடையாகவும் இருக்கிறது. அது நீங்கள் உங்கள் உண்மை இயல்பை நினைவு கொள் கிறீர்களா அல்லது கால தேசத்திற் குட்பட்ட சம்பவங்களையே நினைத்து முடங்கி விடுகிறீர்களா என்பதைப் பொறுத்து இருக்கிறது.

### தன்னுணர்ச்சி அல்லது அகங்காரம் (EGO)

தன்னுணர்ச்சி அல்லது தான் எனும் அகங்காரமானது, ஒரு தலைவர், ஒரு அறிவாளி, ஒரு வியாபாரி, அல்லது ஒரு சேவகன் இவர்களுக்கெல்லாம் ஒரு தடையாக இருக்கிறது. எனவே, இவர்களுக் கெல்லாம் அகங்காரம் ஈகோ இருக்கக்கூடாது. ஆனால், ஒரு வீரம் மிக்க போர்வீரனுக்கு, ஒரு போட்டி யாளருக்கு இந்த குணம் தேவைப் படுகிறது.

ஒரு தைரியமிக்க போர்வீரன் சவால்களையும், பொறுப்புகளையும் ஏற்று அதன்படி நடக்கிறான்.

அகங்காரமானது ஒரு குறிப் பிட்ட காரணத்திற்காக உங் களையே தியாகம் செய்யத் தூண்டு கிறது. அகங்காரமானது, ஏற்றுக் கொண்ட சவால்களை முடிப்பதற்கு உண்டான பலம், தைரியம், பராக் கிரமம் இவற்றைக் கொடுப்பதோடு சகிப்புத்தன்மையையும் விடா முயற்சியையும் அளிக்கிறது. உறுதி யாக இருக்கும் ஒரு அகங்காரத் தன்மையானது மனக்குழப்பத்தை எதிர்த்து நிற்கும். அகங்காரம் என்பது பெரும்பாலும் சுயநலம் என்று கருதப்பட்டாலும், ஆக்க பூர்வமான நிலைக்கும், உதாரண குணத்திற்கும் தூண்டுகோலாக செயற்படுகிறது! அகங்காரம்தான், உங்களை முன்பின் தெரியாத விடயங்களில்கூட சகாசம் புரிய வைக்கத் தூண்டுகிறது.

மூன்றுவிதமான அகங்காரங்கள் உள்ளன. அவையாவன:-

சத்வ, ரஜோ, தமோ குணங்கள் சார்ந்தவை.

தமோ குணம் சார்ந்த அகங் காரம், முரட்டுத்தனமானது; கண் மூடித்தனமானது; தம்மை அழித்துக் கொள்ள வல்லது.

ரஜோ குணம் சார்ந்த அகங்கார மானது, தன்னையே மையமாகக் கொண்டது; தனக்கும் பிறருக்கும் துன்பம் விளைவிக்க வல்லது.

சத்வ குணம் சார்ந்த அகங்கார மானது, ஆக்கபூர்வமானதும், பாதுகாப்பான மனப்பான்மையைக் கொண்டதுமாகும்.

உங்களால் அகங்காரத்தை முற்றிலும் விடமுடியாது என்று

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

தோன்றினால், குறைந்தபட்சம் சத்வ குணம் சார்ந்த அகங்காரத் துடனாவது இருங்கள்; ஏனெனில், சத்வ குண அகங்காரம் தான் தியாகம் செய்யத் தயாராக இருக்க வல்லது. (தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 53

12. புத்தி இரேகையில் புள்ளிக் குறி காணப்படில் மூளையின் சிக்கலான நிலைமையைக் குறிக்கும். புள்ளி எவ்வளவுக்குப் பெரிதோ அவ்வளவுக்குக் கெடுதலே ஆகும். சிறு புள்ளியாயின் அதிகக் கஷ்ட மிராது. புள்ளி அகன்று சிவந்து காணப்படில் மூளைத் தொந்தரவு அதிகப்படுமாதலால் ஜாக்கிரதை யாயிருக்க வேண்டும். நன்கு பதிந்து புத்தி இரேகையில் புள்ளிக் குறி காணப்படில் தற்காலிகமான தொந் தரவைக் குறிக்கும்.

புத்தி இரேகை மெல்லியதா யிருந்து அதில் புள்ளிக் குறி காணப்படில் மனோசக்தி குறைந்து வரும்.

தீவுக்குறியின் இறுதியில் புள்ளிக் குறியுமிருந்தால் நோயுண்டாவதைக் குறிக்கும்.

தீவு எவ்வளவுக்கு அகன்று காணப்படுகிறதோ அவ்வளவுக்குக்

## புத்தி இரேகையின் குற்றங்குறைகள்

கஷ்டம் அதிகம். நோய் தீர்ந்த பிறகு நெடுங்காலம் மனம் சாந்தி பெறாது.

தீவின் இறுதியில் கிராஸ் அல்லது நக்ஷத்திரக் குறியிருந்து, புள்ளிக் குறியிருக்குமாயின் நோய் முடிவைக் கொண்டிருக்கும் என்பதைக் குறிக் கும்.

ஆயுள் இரேகையின் அமைப்பை யும் சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தீவுக்குறியின் இறுதியில் ஒரு நக்ஷத்திரக் குறியிருக்குமாயின், உன் மத்தநிலை நீடிப்பதைக் குறிக்கும்.


13. புத்தி இரேகை துண்டு துண்டாய் இடைவழி காட்டிச் சென்றி ருக்குமாயின், உயிர்ப்புள்ள மின்சார சக்தி செல்லப் பெருந்தடையென அறியலாம். இதனால் தன்னடக்கம் குன்றும். எதிலும் ஆழ்ந்த சிந்தனை செல்லாது. எக்காரியமும் தொடர்ந்து நடைபெறாது. இரேகையில்லா இடைவழியின் காலஅளவில் நோயுண் டாகலாம்; நோய்க்குறி காணக்கூடிய நகங்களையும் ஆயுள் இரேகையைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும்.

14. புத்தி இரேகை துண்டுகளாகப் படிக்கட்டைப்போல் தொடர்ந்து காணப்படில், புத்தியின் நிலையற்ற தன்மையைக் குறிக்கும். மனமாறுதல் அடுத்துண்டாகும். தேகாரோக்கியங் கெட்டு தலைவலியுண்டாகும். பார்வை குறையும். பிரமையுண்டாகும். சரி யாகப்பாதுகாக்காவிடில் சித்தநிலை மாறிவிடும். இந்த இடரான இரேகை சந்திர மேட்டில் திரும்பினால் காரியத் தில் புகுந்தும் புத்தி தடுமாற்றத்தைக் கொடுத்துவரும். துண்டு இரேகைகள் மெல்லிய இரேகைகளால் அல்லது

**சக்தி**

சதுரங்களால் இணைக்கப்பட்டு வருமாயின் கஷ்டங்குறையும். துண்டு பட்ட இரேகைகளின் முனைகளைக் கூர்ந்து கவனிக்கையில் நன்மை, தீமை விளங்கும். துண்டுபட்ட புத்தி இரேகையின் இறுதியிலுள்ள நக்ஷத் திரக்குறி, கிராஸ், புள்ளி, தீவு இவை களிலேதேனும் காணப்படில் மனோ நிலையை அளந்து காட்டுவதாகும்.

புத்தி இரேகையில் நக்ஷத்திரக்குறி




காணப்படில் அபாயமானது. திடீரென மனோ வேகத்தைக் குறைத்து விடும். பக்கவாதத்தையாவது, சித்த பேதத்தை யாவது கொடுக்கும். குரு அல்லது செவ்வாய் ஆதிக்கராயின் மயக்க மடைவர். சனி அல்லது சந்திர ஆதிக்கராயின் பக்கவாதம் அல்லது சித்தபிரமையடைவர். புத்தி இரேகை யின் கிராஸ்களும் தடையைக் குறிப்ப தாகும்.


தேகம் எவ்வளவு திடகாத்திரமா யினும் புத்தி பிரகாசிக்கவில்லை யாயின் இருளடைந்த வீட்டுக்குச் சமமாகும். புத்தியில்லாதபோது ஐம்புலன்களிலிருந்தும் வேலை செய்யத் தகுதியற்று விடுகின்றன. இதனால் புத்தி மகத்தானதென்பது விளங்கும். வாழ்வின் ஏற்றத்தாழ்வு களுக்குப் புத்தியே காரணமாயிருந்து வருவதால் இதன் பலாபலன் நன்கு ஆராய்ந்தறியத்தக்கதாகும். மனோ பாவத்தைக் காட்டக்கூடியது கட்டை விரல். இந்தக் கட்டை விரலிலிருந்து மனோ தர்மத்தை அறியலாம்.

சித்திரத்தில் விவரிக்கப்படாத பலவகையான புத்தி இரேகையின் அமைப்புகளைப் பல்வேறு கை களைப் பார்ப்பதால் அனுபவமாய் அறியலாம். இன்னும் அதிகமான ஏற்றத் தாழ்வுகளைப் புத்தி இரேகை யினின்றும் அறியலாம்.

புத்தி இரேகையைக் கொண்டே, இதர இரேகைகளின் உதவியின்றி அறிந்துகொள்ளலாம். ஜப்பானியர் கட்டை விரலைக்கொண்டு வாழ் வின் மர்மங்களைச் சொல்லுகின்ற னர். இதனால் புத்தி இரேகைக்கு ஆதாரம் கட்டை விரலென அறிய லாம்.

புத்தி, இருதய இரேகைகள் சமமாய்க் குறுக்கே தங்குதடை யின்றிச் சென்றிருந்தால் சிந்தனைக் குட்படாத தீர்மனாத்தோடுங் கூடிய வாரவர். மிதபாஷியாய்க் காரியத்தில் கண்ணாயிருப்பர். (தொடரும்)


# வைகோ யாருக்காக அழுகின்றார்?



-திருச்சி செல்வேந்திரன்!

(நேற்றைய தொடர்ச்சி....)

இனி பலத்த தாக்குதல் நடக்காது என்று கலைஞர் அறிவித்தாராம். ஈழத்தில் அதனால்தான் பதுங்கு குழிகளிலிருந்து தமிழர் வெளியே வந்தார்களாம். இலங்கை அரசு அவர்கள் மீது குண்டு வீசிக் கொன்றதாம். இதற்குக் காரணம் கலைஞர் தான் என்கிறார் வைகோ. டில்லி-ஜன்பத்சாலை பத்தாம் நம்பர் வீட்டிலிருந்து கலைஞருக்கு மிரட்டல் வந்ததால் உண்ணாவிரதத்தை கலைஞர் முடித்துக் கொண்டார் என்கிறார் வைகோ. இவ்வளவு பெரிய இரகசியத்தை தெரிந்து வைத்திருக்கின்ற வைகோவுக்கு போர் நிறுத்த அறிவிப்பு பொய்யானது என்று ஏன் தெரியாமல் போயிற்று. இது பொய்யான அறிவிப்பு வெளியே வராதீர்கள் என்று ஏன் வைகோ சொல்லியிருக்கக் கூடாது. அவர்களைச் சாவில் இருந்து காத்திருக்கக் கூடாது?



போரின் பின்னடைவுக்கு காரணம் சகோதர யுத்தம் என்று கலைஞர் சொல்கிறாராம். இது கலைஞர் செய்கிற மாபெரும் துரோகம் என்கிறார் வைகோ. ஈழ போராளிகள் குழுக்களில் பலர் இருந்தனர். அவர்களுக்குள்ளே இருந்த கருத்து வேறுபாடுகளுக்குள்ளோ யார் சரி? யார் தவறு என்ற ஆராய்ச்சிக்கெல்லாம் நாங்கள் செல்ல இப்போது விரும்பவில்லை. ஆனால் அவர்களை எல்லாம் துரோகிகள் என்று சொல்கிற உரிமை வைகோவுக்கு இருக்கிற போது சகோதர யுத்தம் என்ற சாதாரண வார்த்தை கூட கலைஞர் பயன் படுத்தினால் அவரைத் துரோகி என்று சொல்வது தவறானது. கண்டனத்திற்குரியது.

எதிர் புரட்சியாளர்கள் என்கிற சொல்லே கம்யூனிஸ்டுகளிடம் கடன் வாங்கப்பட்டது. விவாதத்திற்குரியது. எதிர்புரட்சியாளர்கள் என்று கம்யூனிஸ்டு நாடுகளில் சொல்லப்பட்டவர்கள் தலைமைக்கு எதிரானவர்களா? தத்துவத்திற்கு எதிரானவர்களா? என்று விவாதம் இன்னமும் ஓயவில்லை. தி.மு.க வில் தான் அநியாயமாகப் பழி சொல்லப்பட்டு நீக்கப்பட்டதாக வைகோ வருத்தப்பட்டிருக்கிறார். தலைமைக்கு எதிரானவர்களாய் இருந்தாலும் சரி தத்துவத்திற்கு எதிரானவர்களாய் இருந்தாலும் சரி- அவர்கள் தூக்கி எறியப்படுவது நியாயம் தான் என்ற வைகோவின் வார்த்தையே அவர் தனக்குப் பொருத்திப் பார்த்துக் கொள்ளட்டும்.

தான் தி.மு.க வில் இருந்து நீக்கப்பட்ட பழைய கதையையே ஏன் வைகோ மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதற்குப் பின்புதான் இமைப்போதும் அவர் நெஞ்சில் நீங்காதிருக்கின்ற தலைவர் கலைஞரின் தலைமையில் இருந்த கூட்டணியில் இணைந்து விட்டாரே. தன் கட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்று இரண்டு அமைச்சர்களையும் அமர வைத்து அழகு பார்த்தாரே. அவர்களும் சகல சௌபாக்கியங்களோடு சுகித்திருந்தார்களே. இன்னமும் எதற் குப் பழைய கதை?


கோடிக்கணக்கான மக்களின் இதயத்தில் அண்ணாவின் கொள்கை தீபத்தை ஏற்றிய கடவுளாக எம்.ஜி.ஆர். அவரை கட்சியில் இருந்து நீக்கிய பாவத்தை கலைஞர் செய்தாராம். அவரைக் கட்சியில் இருந்து நீக்கியது தவறு என்று சென்ற வாரம் போதி மரத்தடியில் உட்கார்ந்து ஞானம் பிறந்த பின்பு சொல்கிறார் வைகோ. எம்.ஜி.ஆர். விலக்கப்பட்ட போது ஆலடி அருணா போன்ற மூத்த தொண்டர்கள் வைகோவுக்கு குருவை போல் இருந்த விருதுநகர் சீனிவாசம், காளிமுத்து போன்றவர்கள் முன்பும் பின்புமாய் தி.மு.கவை விட்டு எம்.ஜி.ஆரிடம் சென்றார்கள்.

இன்றைக்கு எம்.ஜி.ஆருக்காக கண்ணீர் வடிக்கின்ற வைகோ ஏன் அப்போது எம்.ஜி.ஆரோடு போகவில்லை? வெளியேறிய எம்.ஜி.ஆரைப் பற்றி பொது மேடைகளில் இவர் பேசிய பேச்சுக்கள் ஒலிநாடாக்களில் இன்னமும் இருக்கின்றன.

ஈழத் தமிழர்கள் பிரச்சினையைப் பற்றி பேசுகிற போது உட்கட்சி விவகாரங்களை வைகோ கிளறியதால் நாமும் சிலவற்றை நினைவுக்குக் கொண்டு வர வேண்டியிருக்கிறது.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களைத் தனி நாடாக்கி அதை தன் கையிருப்பில் வைத்து கொள்வதற்காக தோழர் வைகோவால் விரட்டப்பட்ட மூத்த தொண்ட ர்களான தூத்துக்குடி கிருஷ்ணன், சௌந்தரபாண்டியன் போன்றவர்கள் கலைஞரிடம் வந்து புலம்பிய புலம் பல்களைக் கேட்ட அறிவாலயத்தின் சுவர்கள் அப்படியேதான் இருக் கின்றன. மூத்தவர்களை விடுங்கள். துடிப்புமிக்க இளைய வழக்கறி ஞர்களான ஜெயம், ஜூலி யஸ் போன்றவர்கள் பொதுக்கூட்டங்க ளிலேயே புலம்பிய புலம்பல்களை ஆறுமுகனேரி, காயல்பட்டினம், திருச்செந்தூர் மேடைகளில் பொது மக்களே கேட்டிருக்கிறார்கள்.

தி.மு.கவில் இளைஞரணி ஆரம்பிக்கப்பட்ட போது ஸ்டாலினோடு முக்கியமான உறுப்பினர்களாய் இருந்த நான்கு, ஐந்து பேரில் இந்த ஜெயம் ஜூலியசும் ஒருவர்



நிறைவாக ஒரு சந்தேகம் தி.மு.கவுக்கு என ஒரு தொண்டரணியை உருவாக்கவும் அவர்களுக்கென ஒரு சீருடை வழங்கவும் அவர்களுக்குக் பொலிஸ் துறையினரை போல பயிற்சி அளிக்கவுமான திட்டத்தை அறிவித்து நடைமுறைப்படுத்தியது வைகோதான் என்று அவரை சார்ந்த நண்பர்கள் இப்போது சொல்லிக் கொண்டிருப்பது ஈழ விடுதலைக்காக கல்யான மண்டபங்களில் கண்டன கூட்டங்கள் நடத்தி கர்ஜித்து கொண்டிருப்பதை விட தோழர் வைகோ மாவோயிஸ்ட்டுக்களை போலவோ வேறு பல ஆயுதப்புரட்சி இயக்கங்களை போலவோ இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளித்து அவர்களை இலங்கையின் சிங்களப் பகுதிகளில் கொரில்லா போர் நடத்த அனுப்பியிருக்கலாமே? தமிழீழக் களத்தில் விடுதலைப் புலிகளோடு இலங்கை இராணுவம் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்ற போது தலைநகர் கொழும்பிலேயே கொரில்லா போர் நடத்தினால் இலங்கை நிலைகுலைந்து போயிருக்காதா? வரலாற்றில் ஒரு பிடல் காஸ்ட்ரோவின் பெயரும் சேகுவாராவின் பெயரும் துருவ நட்சத்திரமாய் ஒளி விடுவதை போல் தோழர் வைகோவின் பெயரும் இடம் பெற்றுத் தமிழ் நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்குமே?

தோழர் வைகோ அவ ர்களே! நாங்கள் தான் அற்ப பதவிக்கு ஆசைப்பட்டு கூட்டணி அரசியலில் சிக்கி தவிக்கின்றோம். இப்போதும் ஒன்றும் முடிந்து போய் விடவில்லை. ஈழ விடுதலை போரில் ஒரு களத்தில்தான் தோல்வியை சந்தித்திருக்கிறது. நீங்களே சொல்வது போல் இறுதி வெற்றி போராளிகளுக்குத்தான். ஒலி வாங்கிகளை உதறுங்கள். பேனாவை தூக்கி எறியுங்கள். புலம்பல் புரா ணங்களை நிறுத்துங்கள். ஈழக்கள த்திற்கு மேற் சொன்னபடி தமிழகத் திலிருந்து படை புறப்படச் செய்யுங் கள். முடிந்தால் நாங்களும் வர முயல்கிறோம். (முற்றும்)


நக்கீரன்



வடமாகாண திட்டமிடல் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாண திட்டமிடல் ஒருங்கிணைப்புக் கூட்டம் அண்மையில் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி உரையாற்றுவதையும் கலந்து கொண்ட திணைக்களத் தலைவர்கள், செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்.)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 120




ஜேர்மன் துருப்புகள் பராக்கு கோட்டையை அடைந்தபோது-1939 மார்ச்

கர்பாத்து தூக்லின் நடவடிக்கைக்குப் பெரும் இராணுவ அரசியல் முக்கியத்துவமிருந்தது, இது செக்கோஸ்லொவாக்கிய விடுதலையின் தொடக்கமாக அமைந்தது. இந்நாட்டு விடுதலை மற்றும் செக்கோஸ்லொவாக்கிய மக்களின் நட்பு உறுதியடைய உதவியது. சண்டைகளின்போது சோவியத், செக்கொஸ்லொவாக்கியப் போர் வீரர்களுக்கிடையிலான ஒற்றுமை வளர்ந்து வலுப்பட்டது.

நடவடிக்கையின் விளைவாய் பாசிச ஜேர்மனியத்துருப்புகளுக்கு பேரிழப்புகள் •ஏற்பட்டன. போர்க்களத்தில் 52 ஆயிரம் நபர்கள் கொல்லப்பட்டனர். காயமடைந்தனர்; 837 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளையும் 185 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளையும் பெருமளவு மற்ற ஆயுதங்களையும் எதிரி பறிகொடுத்தான். சோவியத் தரப்பில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்; காயமடைந்தனர்; 1-வது செக்கோஸ்லொவா்க்கிய ஆர்மி கோர்பஸ் 6ஆயிரத்து 500 நபர்களை இழந்தது.

செஞ்சேனை தன்னலமின்றி சர்வதேசியக் கடமையை நிறைவேற்றியதைப் பற்றிக் குறிப்பிடும் போது கூஸ்டவ்கூசக் பின்வருமாறு எழுதினார்: “ஸ்லாவிய தேசிய எழுச்சியில் பங்கேற்றவர்களில் ஒருவனாயிருந்த நான் இதன் தொடர்பாக மிக ஆபத்தான, மிகக்கடினமான நடவிடிக்கைகளை உணர்ச்சி ததும்ப எண்ணிப் பார்க்கிறேன் இந்நட

செக்கோஸ்லொவாக்கிய வீரர்கள் புகையிரதத்தில் நகர்வுகளை மேற்கொண்டபோது



வடிக்கைகளின்போது செஞ்சேனை ஸ்லொவாக்கியாவில் மையத்திலிருந்த எதிர்ப்புச் சக்திகளுக்கு உதவ விரைந்த போது கர்பாத்து மலைகளின் ஊடே பிளந்து செல்ல முயன்றது.”

தூக்லா செக்கோஸ்லொவாக்கிய, சோவியத் மக்களின் வரலாற்று விதிகளை நெருங்கி வரச்செய்தது., இவர்களுடைய புதிய புரட்சி மற்றும்



செக் நகரில் உயிர்தியாகம் செய்த சோவியத் வீரர்களின் சமாதிகள்

போர்ப்பாரம்பரியங்களை ஏற்படுத்தியது. “எங்களுடைய மக்களின் நெஞ்சிலும் சுய உணர்விலும் உறுதியாக நுழைந்த கோசம் தூக்லாவில்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

பிறந்தது. சோவியத் யூனியனோடு என்றென்றும்சேர்ந்து நிற்போம்! சோவியத்யூனியனோடு மட்டுமே தவிர வேறெப்போதும் எம்மாதிரியும் இல்லை.” என்று 1949-ஆம் ஆண்டில் செக்கோஸ்லொவாக்கியத் தலைவர் கிளேமன்ட் கோட்வல்ட் எழுதினார்:

தூக்லின் கணவாய் விடுவிக்கப்பட்ட நாளாகிய 1944 அக்டோபர் 6 செக்கோஸ்லொவாக்கிய இராணுவ தினமாக அறி விக்கப்பட்டுசெக்கோஸ்லொவாக்கியாவில் பெரும் தேசிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

### பால்டிக் குடியரசுகள் மற்றும் ஸபல்யார்யேவின் விடுதலை

### பால்டிக் நடவடிக்கை (1944சப்ரெம்பர்14-அக்டோபர் 22)

1944 கோடைகாலத் தாக்குதல் நடவடிக்கைகளின் பயனாய் சோவியத் துருப்புகள் பால்டிக் குடியரசுகளினுள் நுழைந்தன. லித்துவேனியாவை முழுமையாக விடுவித்து லாத்வியா மற்றும் எஸ்தோனியாவிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி அடிப்பதற்காகப் புதிய போர்த்தந்திர நடவடிக்கை முன்னிருந்தது. பால்டிக் குடியரசுகளைத் தன்வசம் வைத்திருக்க முயலும் முகமாக பாசிச ஜேர்மனியப் படைத் தலைமை இங்கே பெரும் சக்திகளைக் குவித்து பல படை வரிசைகளுடைய தற்காப்பைத் தயார்ப் படுத்தியது.



செக்கோஸ்லொவாக்கிய தளபதி அலெக்சான்டர் ஹெரஸ்

நடவடிக்கையின் தொடக்கத்தில் சுமார் ஆயிரம் கி.மீ. நீளமுடைய போர்முனையில் (பின்லாந்து வளைகுடாவிலிருந்து நேமன் ஆறுவரை) நார்வே இயங்குபிரிவு, 16வது, 18வது போர்க்களப்படைகள் சென்டர் படைத்தொகுதியிலிருந்து அழைக்கப்பட்ட 3-வது டாங்கிப்படை ஆகியவற்றை உள்ளடக்கிய வடக்குப் படைத்தொகுதி தற்காத்து நின்றது. எதிரியிடம் மொத்தமாக 56 டிவிஷன்களும் 3 மோட்டார் பிரிகேடுகளும் இருந்தன. எதிரியின் பால்டிக் படைத்திரட்டில் 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட போர்வீரர்கள் இருந்தனர். ஆயிரத்து 216 டாங்கிகள், திடீர்தாக்குதல் பீரங்கிகளும்சுமார் 7 ஆயிரம் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 400 விமானங்களும் இருந்தன.




செக்கோஸ்லொவாக்கியாவில் சாவடைந்த ஜேர்மனிய வீரர்களது சமாதிகள்


தால்லின் திசையில் லெனின்கிராட் சேனையின் தாக்குதல் மண்டலத்தில் எதிரியின் தற்காப்பு 25-30 கி.மீ. ஆழமுள்ள மூன்று தற்காப்பு வரிசைகளை அடக்கியிருந்தது. ரீகா திசையில் பால்டிக்சேனைகளின் மண்டலத்தில் மூன்று தற்காப்பு எல்லைகள் இருந்தன. வால்கா என்ற முதலாவது எல்லை, சோவியத் துருப்புகள் இருந்த இடத்திலிருந்து 100-150 கி.மீ.தூரத்தில் சென்றது. இதில் 10-12 கி.மீ. ஆழமுள்ள இரண்டு தற்காப்பு வரிசைகள் இருந்தன த்சேசிஸ் என்ற இரண்டாவது எல்லை முன்னணி எல்லையிலிருந்து 80கி.மீ தூரத்திலிருந்தது. ஒரு தொடர்ச்சியான பதுங்கு குழியும் ஆயுதங்களை உடைய சுடும் இடங்களும் இதில் அடங்கியிருந்தன. இரண்டாவது எல்லையிலிருந்து 25-40 கி.மீ. தூரத்தில் சென்ற சீகுல்தா என்ற மூன்றாவது எல்லை, இரண்டு தற்காப்பு வரிசைகளையும் மூன்று இடைநிலைகளையும் உள்ளடக்கியிருந்தது. ரீகா வட்டாரத்தில் தற்காப்பு வளையங்கள் அமைக்கப்பட்டன. வெளி எல்லை இரண்டு தற்காப்பு வரிசைகளைக் கொண்டு நகரத்திலிருந்து 10-15 கி.மீ தூரத்திலிருந்தது, உள் எல்லை நகரின் எல்லைப்பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்தது.

ஜேர்மனியத் துருப்புகளின் பால்டிக் படைத்திரட்டை முறியடிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த சோவியத் சேனைகளின் வசம் 125 துப்பாக்கிப்படை டிவிஷன்கள், 7 பலப்படுத்தப்பட்ட வட்டங்கள், 7 டாங்கி மற்றும் இயந்திரப்படை கோர்பஸ்கள் முதலியன இருந்தன. இவற்றில் 9 இலட்சம் போர்வீரர்கள் இருந்தனர்.


(தொடரும்)

## அதிசய உலகம்...

# உலகிலேயே மிகப்பெரிய அலாரம் மணிக்கூடு



# இயற்கை எழில் கொஞ்சும் புகைவண்டிப் பாதை



பசும் மரங்களால் சூழப்பட்ட இயற்கை எழில் கொஞ்சும் வகையில் அமைக்கப்பட்ட புகை வண்டிப் பாதையானது உக்ரேன் நாட்டில் காணப்படுகின்றது.

இது பார்ப்பதற்கு ஒரு குகை போன்ற வடிவில் காட்சியளிக்கின்றது. இப் புகைவண்டிப்பாதையானது இந்தியாவிற்கு பெருமை சேர்க்கும் சின்னமான தாஜ்மஹாலைப் போன்று உக்ரேனிற்கு பெருமை சேர்ப்பதான ஒரு அடையாளமாக விளங்குகின்றது.

# பறந்து பறந்து சுடும் டேப்லட் மூலம் இயங்கும் துப்பாக்கி



டேப்லட் மூலம் கட்டுப்படுத்தும் புதிய பறக்கும் எந்திர துப்பாக்கி ஒன்றை தயாரித்து அதன் செயல் விளக்க வீடியோ யூடியூபில் அப்லோட் செய்யப்பட்டிருக்கிறது. ஹெலிகொப்டர் போன்று பறக்கும் ஒரு குவேட்ரேட்டர் எந்திரத்தை உருவாக்கி அதில் இந்த எந்திர துப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது. இந்த துப்பாக்கியின் விசேடம் மணிக்கு அதிகபட்சமாக 50 கி.மீ வேகத்தில் இந்த குவேட்ரேட்டர் பாய்ந்து செல்லும்.

அதோடு இந்த பறக்கும் எந்திர துப்பாக்கியில் கமராவும் பொருத்தப்பட்டுள்ளதால் இலக்கை சரியாக குறிவைத்து ஏவ முடியும்.

இதனால் மனிதர்களையும் பறவைகளையும் கூட வித்தியாசப்படுத்தி அறிந்து கொள்ளும் வகையில் இதன் கமரா உதவும். இந்த எந்திர துப்பாக்கியின் முக்கிய அம்சமே இதை டேப்லட் மூலம் இயக்க முடியும் என்பது தான்.

இதனால் இருக்கும் இடத்தில் இருந்தே இந்த பறக்கும் எந்திர துப்பாக்கியை கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வர முடியும். அற்புதமான இந்த பறக்கும் எந்திர துப்பாக்கியின் இயக்கத்தை இங்கே கொடுக்கப்பட்டுள்ள வீடியோவின் மூலம் பார்க்கலாம்.

# 5 ரூபா நாணயத்தில் சங்கிலி தயாரிப்போர் குறித்து தகவல் தர கோருகிறது பொலிஸ்

(கொழும்பு)

ஐந்து ரூபா நாணயக் குற்றிகளைப் பயன்படுத்தி தங்கச் சங்கிலிக்குச் சமனான சங்கிலிகளைத் தயாரிப்பது தொடர்பான தகவல்கள் அறிந்திருப்பின் உடனடியாக பொலிஸ் திணைக்களத்தின் போலி நாணயம் தொடர்பான விசேட பிரிவுக்கு அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கொழும்பு பஸ்தரிப்பு நிலையங்கள் முதல் நடைபாதை வரையில் 5 ரூபா நாணயக் குற்றிகளில் தயாரிக்கப்பட்ட சங்கிலிகள் எனக் கூவியவாறு வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர். கண்டி பல்லேகல பகுதியில் இந்தச் சங்கிலிகள் தயாரிக்கப்படுவதாகக் கூறுவதுடன் இவை கறுப்பதில்லை.

சுரண்டினாலும் மினுமினுப்பு போவதில்லை எனக் கூவியவாறும் கத்தியினால் சுரண்டியும் காண்பிக்கின்றனர்.

நாணயக் குற்றிகளை நாணயத் தாள்களை சேதப்படுத்தல் மற்றும் அழித்தல் திறைசேரியின் சுற்றுநிருபத்தின் படி குற்றச் செயலாகும். அத்துடன் இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவிக்கையில்,

நாணயக் குற்றிகளை அழித்து சங்கிலிகள் தயாரிப்பது தொடர்பான தகவல்கள் தெரிந்திருப்பின் உடனடியாக அறிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். (அ-2)

# 20 இலட்சம் முஸ்லிம்களை ஒன்றுதிரட்டி புலிகளின் அநியாயங்களை கூறுவேன்

## அமைச்சர் றிசாட் ஆவேசம்

தம்புள்ள பிக்கு மிகவும் கேவலமான முறையில் நடந்து கொண்டது போல் மன்னார் ஆயரும் நடந்து கொள்வதாக அமைச்சர் றிசாட் பதியுதீன் குற்றம் சாட்டியுள்ளார். பாரா ளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமபுள்ளயில் ஒரு பிக்கு மனிதன் செய்ய முடியாத வகையிலான மிகவும் கேவலமான வேலைகளை செய்தார். அவர் நேரில் சென்று பள்ளிவாசலை உடைத்தார், மிரட்டல்கள் விடுத்தார். மன்னாரில் காடுகளை முஸ்லிம்கள் ஆக்கிரமிப்பதாக ஜனாதிபதிக்கு கடிதமும் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தின் பிரதியை ஜனாதிபதி என்னிடம் தந்துள்ளார்.

நான் யாருடைய காணியையும் ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. இடம்பெயர்ந்த ஒரு இலட்சம் முஸ்லிம்களை மீள் குடியேற்றவே முயற்சிக்கின்றேன். என் உயிரைக் கொடுத்தாவது அவர்களை அந்த இடங்களில் மீள்குடியேற்றியே தீருவேன்.

இவர்களை மீள்குடியேற்ற அனுமதிக்காது விட்டால் 20 இலட்சம் முஸ்லிம்களையும் ஒன்றுதிரட்டி புலிகளின் அநியாயங்கள் தொடர்பில் விசாரணை செய்ய ஒரு ஆணைக் குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோருவேன் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

பரதநாட்டிய அரங்கேற்றம்

செல்வி. தீபனா இராசேந்திரம்-சுவிஸ்



(8442)

"தாரணி", இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்து செங்காளனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் - ஜெயதேவி தம்பதிகளின் ஏக புத்திரியும், எமது மருமகளுமான செல்வி தீபனா இராசேந்திரம் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று (2012.05.13) சுவிஸ்லாந்தில் உள்ள "Mehrzweckanlage steinegg,Turnplatzweg 2A" மண்டபத்தில் நடைபெறுவதையிட்டு எல்லாம் வல்ல சந்நிதி முருகனை வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.திருமதி.தெய்வேந்திரன் இராஜேஸ்வரி குடும்பம்

"தாரணி"
இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டி.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## 17.05.2012 - 28.05.2013

**மகம், பூரம், உத்திரம் 1 ஆம்பாதம்**

**இனிமேல் வந்திடும் இடமாற்றம்!**

**பகைவர்களைக் கூட தங்கள் வெற்றிக்கு படிக்கட்டுகளாக மாற்றிக்கொள்ளும் சிம்ம இராசி நேயர்களே!**

தங்கள் கொள்கையை யாருக் காகவும், எதற்காகவும் விட்டுக் கொடுக்காதவர்கள் நீங்கள். நினைத் ததை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு மேலோங்கி யிருக்கும். சூரியனின் ஆதிக்கத்திற்கு உரிய இராசியில் நீங்கள் பிறந்திருப் பதால் தலைமைப் பதவிக்கு நீங்கள் தகுதியானவர் என்பதை நிரூபித்துக் காட்டுவீர்கள்.

சப்தமாதிபதியாக சனி விளங்கு வதால் குடும்பம் திருப்திகரமாக அமைவது அரிது. இரண்டு சிம்ம இராசிக்காரர்கள் ஒரே இல்லத்தில் வசித்தாலும், உடன்பிறப்பாக இருந் தாலும், காரிய தடைகள் உருவாக லாம்.

உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக குரு விளங்கி, இப்பொழுது 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். பத்தாமிடத்து குரு பதவியில் ஒரு மாற்றத்தை கொடுக்கும் என்பது முன்னோர் வாக்கு. ஆனால், அப்படி இருக் குமோ? இப்படி இருக்குமோ? என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். அது கேதுவுடன் சேர்ந்து சஞ்சரிக்கப் போகிறது. எனவே, இராகு திசை, கேது திசை நடப்பவர்களும், இராகு புத்தி, கேது புத்தி நடப்பவர்களும் குரு திசை மற்றும் குரு புத்தி, சுக்கிர புத்தி நடப்பவர்களும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

குருப் பெயர்ச்சி இத்தனை மகத் துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு இதுவரை ஒப்பதாமிடத்தில் சஞ் சரித்து வந்த குருபகவான் 17-05-2012 முதல் பத்தாமிடத்தில் சஞ்சரிக் கப்போகிறார். குரு உங்கள் இராசி க்கு 5,8, ஆகிய இடங்களுக்கு அதி பதியாக விளங்குகிறார். இதன் அடிப்படையில் பார்க்கும்பொழுது, வந்த குருவை வரவேற்று, கொண் டாடி, மஞ்சள் வண்ண வஸ்திரம் சாத்தி, வழிபட்டு, நெஞ்சம் மகிழும் விதத்தில் குரு கவசமும் பாடினால் கொஞ்சம்கூட நீங்கள் யோசிக்காது செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும்.

## சிம்மம்



ஞாயிற்றுக்கிழமையன்று அவிட்ட நக்ஷத்திரமும் வரும் நாளில் செய்யும் குரு பரிகாரம் நல்ல பலன்களை வழங்கும். குருவிற்குரிய ஹோமங் களில் கலந்துகொள்வதன் மூலமும், அன்னதான வைபவங்களில் கலந்து கொள்வதன் மூலமும், பத்தாமிடத்து குருவின் சஞ்சாரத்தால் பதவி மாற்றம் கூட நல்ல மாற்றமாக அமையும்.

**பத்தாமிடத்தில் வந்த குரு!**

உங்கள் இராசிக்கு 5,8 க்கு அதிபதியான குருபகவான் பத்தாமிடத் தில் சஞ்சரிக்கப் போகிறார். வழக்க மாக சஞ்சரிப்பதற்கும், இப்போது சஞ்சரிப்பதற்கும் வேறுபாடு உள்ளது. இப்பொழுது சஞ்சரிப்பது பகை வனான சுக்கிரன் வீட்டில், பகை வீட் டில் சஞ்சரிக்கும்பொழுது, ஒருவருக்கு பலம் வருமா? அல்லது பலவீனம் வருமா? என்பதைப்பற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்கள் சுயஜாதகத்தில் இதே அமைப்பில் குரு இருந்தாலும் அல்லது பகை கிரகத்தின் பாதசாரத்தில் சஞ்சாரம் செய்திருந் தாலும், இப்பொழுது நல்ல பலன் களை அள்ளிக் கொடுப்பார். மேலும் இப்பொழுது சொல்லும் குருபக வான் கேதுவுடன் சேருகிறார். பாம்பு கிரகத்தின் சேர்க்கை ஏற்படும் பொழுது, பலன்கள் ஸ்திரமாக இருக் காது. ஏற்றமும், இறக்கமும், இன்ப மும், துன்பமும் வந்து வந்து போக லாம். அவற்றை சரிசெய்ய சர்ப்ப சாந்தியை செய்து கொள்வது அவசிய மாகும்.

அது மட்டுமல்லாமல், இராகு திசை, கேது திசை நடப்பவர்கள், இராகு புத்தி, கேது புத்தி, சுக்கிர புத்தி, சூரிய புத்தி நடப்பவர்கள் அவசியம் பரிகாரம் செய்துகொள்வது நல்லது.


கள், பலாபலன்களை நாம் அறிந்து கொள்ள இயலும். அந்த அடிப் படை யில் பார்க்கும்பொழுது தொழில், உத்தியோகத்தில் நிலையற்ற தன்மை, துடிப்போடு பணிபுரிந்தாலும் மேலதி காரிகளின் அனுசரிப்பின்மை, சொன்ன சொல்லை நிறைவேற்ற இயலாத நிலை, தத்துப்பிள்ளைகளால் தொல்லை, கால் மற்றும் தொடை பகுதிகளில் வலி, பிறருக்காக சில காரியங்களை விட்டுக்கொடுத்தல், தியாகம் செய்தல், திரவியம் தேடும் முயற்சியில் புதிய கூட்டாளிகளை இணைத்துக்கொள்ளு தல் போன்றவை உருவாகும்.

குறிப்பாக, கூட்டாளிகளை நம்பி செயற்படும்பொழுது முழுமையாக அவர்கள் ஒத்துழைப்புச்செய்வார்களா? என்பதை அறிந்து கொண்டு செயற் படுவதுதான் நல்லது. வியாழன் தோறும் விரதமிருந்து அருகில் உள்ள ஆலயத்திற்கு அதிகாலை நேரங்களில் சென்று, குரு தட்சணாமூர்த்தி சன்னி தியில் வழிபாடுசெய்து வந்தால் கும் பிட்ட மாந்தர்களுக்கொல்லம் நம் பிக்கையோடு பலன்கள் நடைபெறும்.

**குருவின் பார்வை பலன்கள்!**

குருவின் பார்வையால் உங்கள் இராசிக்கு 2, 4, 6, ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. எனவே, குடும் பத்தில் குதூகலங்கள் அதிகரிக்கப் போகின்றன. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தனவரவு பெருகும்.

பிறர் போற்றும் அளவிற்கு நல்ல காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள். கடந்த ஓராண்டாக நடைபெற்ற பஞ்சாயத்துக்களில் கட்டுப்படாத



உங்கள் இராசியை பொறுத்தவரை பஞ்சம, அஷ்டமாதிபதியாக குரு விளங்குவதால் நன்மையும், தீமையும் கலந்தே கொடுப்பர். வாழ்க்கை தேவைகள் கடைசி நேரத்திலேயே பூர்த்தியாகும். நேசித்தவர்கள் உங்களை விட்டு விலகினாலும், யோசிக்கவேண்டாம். ஆசைப்பட்ட படியே அடுத்த நண்பர்கள் அறிமுக மாகி விடுவார்கள்.

குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ் நிலை உருவாகலாம். பெண்குழந்தை களை பின்னணியாக இருந்து பார்த்துக்கொள்வது நல்லது. அல்லது அவைகளாக சில முடிவுகளை தானாக தேர்ந்தெடுக்கலாம். அதற்கு நீங்கள் அங்கீகாரம் செய்வதுபோல் ஆகிவிடும். பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்து வரலாம். எனவே, நெட்டையோ, குட்டையோ என்று பார்க்காமல் பஞ்சாயத்துக்களை விரைவில் முடித்துக்கொள்வது நல்லது.

தேக நலனிலும் நீங்கள் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவா

# தெய்வவழிபாடுகளை மேற்கொண்டால் செல்வச்செழிப்பில் மிதக்கலாம்...!

**பத்திலே குரு வந்தால்,**
**பதவியில் மாற்றம் சேரும்!**
**மூத்தான வாழ்வில் வந்த**
**முன்னேற்றம் குறையலாகும்!**
**கொத்தோடு துன்பம் ஓட**
**குருவருள் உமக்குத் தேவை!**
**உற்சாகத்தோடு வாழ**
**உயர்குணம் வழிவகுக்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல் கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் தொழில் மாற்றம், இடமாற்றம் உருவாகலாம். உத்தியோகத்தர்களுக்கு இலாகா மாற்றம், அதிகாரிகளின் அனுசரிப் பின்மை, நீண்டதூரத்திற்கான மாற் றங்கள் உருவாகலாம். சுய ஜாதத்தில் தெசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு திருப்தியற்ற சூழ்நிலை ஏற்படலாம்.

பத்தாமிடம் என்பது தொழில் ஸ்தானம், ஜீவன ஸ்தானம் என்றாலும் கூட, இராஜாங்கத் தொடர்பு, அரசு பணி, சேவை, புண்ணியம் செய்யும் அமைப்பு, தெய்வ வழிபாடு, தத்துப் பிள்ளை, கௌரவம், புகழ், வாணி பம், திரவியம்தேடுதல், காலில் தொடை பகுதி போன்றவற்றைக் குறிக்கும் இடமாகவும் அமையும்.

எனவே, ஜீவன ஸ்தானத்தில் இருக் கும் கிரகம், வந்த கிரகம், வரப் போகும் கிரகம் ஆகியவற்றை ஆராய்ந்து மேற்கண்ட காரகத்து வங்களில் ஏற்படும் நன்மை, தீமை

சகோதரர்கள் இப்போது கட்டுப் படுவர். அரசியல் வாழ்வில் இருப் பவர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க பதவிகள் கிடைக்கும். பிரிந்தவர்கள் வந்திணைவர். குடும்பச்சுமை கூடும். கோவில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள்.

குருவின் பார்வை 4 ஆம் இடத்தை புனிதப்படுத்துவதால் தாயின் உடல் நலம் சீராகும். தக்க விதத்தில் வாகன வசதிகள் வந்து சேரும். மனை கட்டிக்குடியேறும் யோகம் ஒரு சிலருக்கு கிடைக்கும். உங்களைப் பற்றி உறவினர்களிடம் அவதூறாக சொல்லியவர்கள் இப்பொழுது விலகுவர்.

இரும்பு, எந்திரம், ரியல் எஸ்டேட், மருந்து, மரம் போன்ற துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வசதிகள் அதிகரிக்கும். உடல்நிலையில் முன் னேற்றம் கூடும். உற்சாகத்தோ பணி புரிய முன்வருவீர்கள். நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். கொடுக்கல், வாங்கல்களை ஒழுங்கு செய்ய வருமானம் வரும். இந்த நேரத்தில் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிர்ப்புகள் அகலும். இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**வாட்டத்தைப் போக்குமா வக்ர குரு**

இடப இராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12-10-2012முதல் 06-02-2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார்.

கலாம். தீட்டிய திட்டங்கள் நிறை வேற தென்முகக் கடவுளை இன் முகத்தோடு வழிபடுவது நல்லது.

இந்த குரு பெயர்ச்சியால் குழப் பங்கள் அகலும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

**சிவல்புரி சிங்காரம்**

நிகழ்கால தேவைகள் ஒவ்வொன் றாக பூர்த்தியாகும். பதவிகளில் இருப்பவர்களுக்கு பொறுப்புக் கூடும். புதிய திருப்பங்கள் ஏற்படும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை மேலோங்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். சுய ஜாதகத் தில் தெசாபுத்தி பலமிழந்தவர்கள் தெய்வ வழிபாடுகளை மேற்கொண் டால் செல்வச்செழிப்பில் மிதக்க லாம். குறிப்பாக நாக சாந்தி செய் வது நன்மையை தரும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

10 ஆம் இடத்து குருவால் பலன்கள் அதிகம் கிடைக்கவும், பணவரவு திருப்திகரமாக அமை யவும் வியாழன் தோறும் குரு வழி பாட்டை மேற்கொள்ளுங்கள். நந்தீஸ் வரரை வழிபட்டு நிகழ்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்.

நந்தி!நந்தி! வந்திடுக!நலங்கள் யாவும் தந்திடுக!என்ற பதிகத்தை பாடுங்கள். நலமும் கிடைக்கும். வளமும் கிடைக்கும். (தொடரும்)

## நிர்வாகிகள் தெரிவு


(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிக்குளம் மகா வித்தியாலயத்தின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு பாடசாலை மண்டபத்தில் பாடசாலையின் உப அதிபர் செபஸ்டியான் புஸ்பநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகிகளாக செயலாளர் ம.அருள்நாயகம், உப செயலாளர் ஏ. நிலாவினி அத்துடன் 12 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கணக்காய்வாளராக ஜி.வி. அன்டனிரோயும் தெரிவு செய்யப்பட்டார். பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தவர்களில் செயலாளராக செ. கணேஸ்வரனும் உப செயலாளராக த. வசீர், பொருளாளராக த. அரிகரனும் அத்துடன் 12 நிர்வாக உறுப்னர்களும் தெரிவாகினர். (அ-266)

# எரிபொருள் விலை குறித்து அத்தநாயக்கவுக்கு போதிய தெளிவில்லை-அமைச்சர் சுசில்



(கொழும்பு)

**ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எரிபொருள் விலையை அதிகரிக்க அரசு தயாராகி வருவதாக கூறுவதானது எரிபொருள் விலை தொடர்பாக அவருக்கு போதிய தெளிவு இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது என பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

**அரசாங்கம் எரிபொருள் விலையை அதிகரிக்கப்போகிறது என்கிறார் திஸ்ஸ.**

எரிபொருள் விலையை அதிகரிக்க அரசுக்கு எவ்வித யோசனையும் இல்லை. உலக எரிபொருள் விலைகள் தொடர்பாக நாம் நாளாந்தம் அவதானித்தே வருகின்றோம்.

உலகில் எரிபொருள் விலைகள் நாளுக்கு நாள் குறைந்தும் அதிகரித்தும் வருகின்றன.

இதனால் விலை அதிகரிப்புக்கு எவ்வித உதவியும் இல்லை.

மக்களை தவறான பாதையில் வழி நடத்தவே ஐ.தே.க. பொதுச் செயலாளர் இவ்வாறு தெளிவு இன்றி எரிபொருள் விலை தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளார் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்ள்ளார்.

வெசாக் கொண்டாட்டங்களுக்கு மத்தியில் பால்மா, எரிவாயு, சீமெந்து விலைகளை அதிகரித்த அரசு மீண்டும் எண்ணெய் விலையை அதிகரிக்கத் தயாராகின்றது.

இதனை எதிர்வரும் இரு வாரங்களுக்கு மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுப்பதாக யுத்தம் முடிவுற்ற பின்னர் உச்ச நிவாரணத்தை வழங்குவதாக அரசு பிரசாரம் செய்தாலும் மக்களுக்கு இதுவரை எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்த குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக கருத்து கூறும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-2)




யூனியன் அஷ்யூரன்ஸ்சின் யாழ்ப்பாணக் கிளையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கடந்த 6 ஆம் திகதி அக்கிளையின் மண்டபத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றதை படத்தில் காணலாம். (படம்:-அலுவலகச் செய்தியாளர்)

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 7 ஆவது பட்டமளிப்பு விழா

(கொழும்பு)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 7 ஆவது பட்டமளிப்பு விழா இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழா தொடர்பான ஊடக மாநாடு நேற்று முன்தினம் மாலை உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். எம்.இஸ்மாயில் தலைமையில் ஒலுவில் பல்கலைகழகத்தில் இடம் பெற்றது.

இங்கு உபவேந்தர் இஸ்மாயில் உரையாற்றுகையில்,

இதில் எதிர்வரும் 19 ஆம் திகதி உள்வாரி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. மறுநாள் 424 மாணவர்கள் பட்டம் பெறவுள்ளனர்.

இவர்களில் பிரயோக விஞ்ஞான பிரிவில் 58 பேரும் கலை, கலாசார பிரிவில் 237 பேரும் இஸ்லாமிய கற்கைபிரிவில் 70பேரும் வர்த்தக முகாமைத்துவ பிரிவிலிருந்து 59 பேரும் பட்டம் பெறவுள்ளனர். முதலாம் நாள் நிகழ்வின் பிரதம அதிதியாக உயர் கல்விஅமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புப் பேச்சாளராக கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கலந்து கொள்வார் எனக் கூறினார்.

20 ஆம் திகதி வெளிவாரி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. அன்றையதினம் பொதுக்கலைப் பிரிவில் 123 பேரும் வர்த்தக முகாமைத்துவப்பிரிவில் (பிபிஏ). 21 பேரும் வர்த்தகப் பிரிவில் 2 பேரும் பட்டத்தைப் பெறவுள்ளனர்.

அத்துடன் அன்றைய நிகழ்வின் இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகத்தின் ஸ்தாபக உபவேந்தர் எம். எல்.ஏ.காதருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# உடுவில் கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்டமட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட தமிழ் தினப் போட்டி முடிவுகள் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. கந்தசாமியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**பிரிவு- 3**

**நடனம்**

சி.திவ்வியா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), ர.சங்கவி (யா/ ஏழாலை மகா வித்தி

**பிரிவு-4**

**கட்டுரை நயம்**

அ.கோபிகா (யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி), சி.கம்ஷா (யா/ இணுவில் மத்திய கல்லூரி), சி.அபிராமி (யா/உடுவில் மகளிர் கல்லூரி)

**இலக்கணப்போட்டி**

இ. கீர்த்தனி (யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி), வி.காபன்சிகா (யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி), தி. மேனகா (யா/ இணுவில் மத்திய கல்லூரி),

**குறுநாடகஆக்கம்**

வி.திவாகரன் (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), சி.யதர்சிகா (யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி, ந.சுஜிதா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி)

**கவிதை ஆக்கம்**

லோ. அபிரா (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ந.சுகிர்தா (இணுவில் இந்துக் கல்லூரி), ம.மகிஷா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி)

**சிறுகதை ஆக்கம்**

பா. கம்சாயினி (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), ட.ஷாளினி (யா/ இராமநாதன் கல்லூரி), சி.சிந்துஜா (யா/ ஏழாலை சைவ மகாஜன வித்தி

**பேச்சு**

ப.விதுசன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி), சு.பிரகாசினி (யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி), தி.ரதினி (யா/ உடுவில் மகளிர் கல்லூரி)

**பாவோதல்**

சி.சஜீவன் (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி),அ.அனுசுயா( யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி), க.மஜிதா (யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி

**நடனம் தனி**

அ.சாகித்தியகுமாரி (இணுவில் இந்துக் கல்லூரி), த.துளசிகா (யா/ இணுவில் மத்திய கல்லூரி), செ. சியந்தா (யா/ ஏழாலை மகா வித்தி

**இசை தனி**

வி.கல்யாணி (யா/ இணுவில் மத்திய கல்லூரி), சி.நிலாஜினி (யா/ இராமநாதன் கல்லூரி), யோ சுரேந்திரன் (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி),

**பிரிவு-5**

**கட்டுரை இலக்கிய நயம்**

பி.கேமசியா (இணுவில் இந்துக் கல்லூரி), சி.கோகுலவர்த்தனி (யா/ இணுவில் மத்திய கல்லூரி), பா.ஜொஸ்சி (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**இலக்கணப்போட்டி**

செ. மதுஜா (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), பொ. கீதாஞ்சலி (யா/ இராமநாதன் கல்லூரி),செ. கிஷோநாத் (யா/ இணுவில் மத்திய கல்லூரி)

**குறுநாடக ஆக்கம்**

ஹ.விதூசனா (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), கு.கஸ்தூரி (யா/ உடுவில் மகளிர் கல்லூரி),சீ.யாழினி (இணுவில் இந்துக் கல்லூரி)

**கவிதை ஆக்கம்**

ம.மஞ்சுளா (இணுவில் இந்துக் கல்லூரி), ஜெ. தர்சனா (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**சிறுகதை ஆக்கம்**

ரா. மதுரியா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), வி.சுலக்ஷன் (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), க.ரபிதா (இணுவில் இந்துக் கல்லூரி)

**திறனாய்வு**

சி.துளசி (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி),வ.துவாரகன் (இணுவில் இந்துக் கல்லூரி)

**பேச்சு**

ம.சந்தானகுமாரன் (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), த.மகாஜனன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி)

**பாவோதல்**

ச.சத்திதர்சினி (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி),ம.பிரதீபன் (இணுவில் இந்துக் கல்லூரி)

**இசை தனி**

ஜெ.நாகசுஜித்தா (யா/ இராமநாதன் கல்லூரி),யோ. அயித்தா (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), த.கீர்த்தனா (இணுவில் இந்துக் கல்லூரி)

**நடனம் தனி**

இ. பிரவீனா (யா/ இணுவில் மத்திய கல்லூரி), வி.பானுஷா (யா/ இராமநாதன் கல்லூரி),

**குழு நிகழ்ச்சிகள்**

**நாடகம்**

யா/ இணுவில் மத்திய கல்லூரி,யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,யா/ ஏழாலை மகா வித்தி

**விவாதம்**

இணுவில் இந்துக் கல்லூரி,யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,யா/ இணுவில் மத்திய கல்லூரி,யா/ இராமநாதன் கல்லூரி

**தமிழ் அறிவு வினா விடை**

யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி,யா/ மயிலணி சைவ வித்தி

**நடனம் குழு -2**

யா/ இராமநாதன் கல்லூரி, யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

**நாட்டார் பாடல்**

யா/ ஏழாலை மகா வித்தி. (அ-78)

(முற்றும்)

# இலங்கைக்கு பொருத்தமான தலைவர் கிடைக்கவில்லை

## ரத்னதேரர் சுட்டிக்காட்டு

சுதந்திரத்தின் பின்னர் இலங்கைக்கு பொருத்தமான துடிப்பான அரசியல் தலைவர்கள் கிடைக்கவில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் இலங்கைக்கு பொருத்தமான முறைமையை உருவாக்கவும் திட்டமிட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான யோசனைகளையும் முன்வைக்க முடியாது போயுள்ளதுடன் நாட்டை ஸ்திரமான நிலைக்கு கொண்டு செல்ல முடியாது போயுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலுவான நேர்மையான நிரந்தர அரசியல் தலைவர் ஒருவர் தற்போது நாட்டுக்கு தேவையாகியுள்ளது.

எவ்வாறாயினும் அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவரும் ஊழல், மோசடிகள், தவறான பொருளாதார கொள்கைகள், அதிகார பரவலாக்க யோசனை முன்வைக்கும் பேச்சு வார்த்தைகளில் அரசாங்கம் ஈடுபட்டு வரும் நிலையில் அரசாங்கத்தில் இருந்து கொண்டு அமைச்சர் பதவிகளை வகித்து வரும் ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தை பாதுகாக்கும் நிலைக்கு சென்றுள்ளது.

இந்த நிலையில் இப்படியான கருத்துக்களை ஜாதிக ஹெல உறுமய வெளியிடுவது கேலிக்குரியது என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-2)

# பேருந்து சேவையை சீராக நடத்த மாணவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை பாடசாலை சேவையில் ஈடுபடும் மாணவர்களுக்கான இ.போ.ச. பேருந்து சரியான நேரத்தில் சேவையில் ஈடுபடாமையால் பாடசாலை மாணவர்கள் குறித்த நேரத்திற்கு பாடசாலைக்கு சமுகமளிக்க முடியாத நிலை காணப்படுவதாக ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளும் பாடசாலை மாணவர்களினை ஏற்றாமல் செல்வதனால் பாடசாலைக்கு சரியான நேரத்திற்கு சமுகமளிக்க முடியவில்லை.

சில சந்தர்ப்பங்களில் பாடசாலைக்கு மாணவர்கள் செல்வதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பேருந்து சேவையை சீராக நடத்த வேண்டுமென மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-4)

# குளிரூட்டியற்ற மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## ஔடதங்கள் அதிகாரசபை தீர்மானம்

(கொழும்பு)

குளிரூட்டி வசதியற்ற மருந்தகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேசிய வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

ஒரு சில மருந்தகங்களின் உரிமையாளர்கள் குளிரூட்டிகளை செயற்படுத்தாமை தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் காரணமாக மருந்துகளின் தரம் குறைவடைவதற்கும் இரசாயன மாற்றங்கள் ஏற்படுவதற்கும் சந்தர்ப்பம் உள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பாணந்துறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பொன்றில் இத்தகைய மூன்று மருந்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மருந்தகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு தேசிய வாசனைத்திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, கொழும்பு நகர மண்டபத்தை அண்மித்த பகுதியிலுள்ள பல்பொருள் வர்த்தக நிலையக் கட்டடத் தொகுதியொன்றில் நடத்திச் செல்லப்பட்ட பதிவு செய்யப்படாத மருந்தகம் ஒன்றிலிருந்த அனைத்து மருந்துப் பொருட்களையும் அதிகார சபை பறிமுதல் செய்துள்ளது. (அ-2)

# மஹோற்சவம்

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கொடியேற்றப் பெருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதன்போது எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (அ-7)

# 2012.05 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1619- டச்சு அரசியல்வாதி ஜொகான் வன் ஓல்டென்பார்னவெல்ட் ஹேச் நகரில் நாட்டுத்துரோகக் குற்றச் சாட்டின் பேரில் தூக்கிலிடப் பட்டார்.

★ 1648- டில்லியில் செங்கோட்டை கட்டி முடிக்கப்பட்டது.

★ 1765- யாழ்ப்பாணத்தின் டச்சுத் தள பதியாக அந்தனி மூயார்ட் நியமி க்கப்பட்டான்.

★ 1787- அவுஸ்திரேலியாவில் குடியேற் றத்தை ஆரம்பிப்பதற்கென 11 கப்பல்களில் 772 சிறைக் கைதிக ளையும் குற்றவாளிகளையும் ஏற்றிக்கொண்டு கப்டன் ஆர்தர் பிலிப் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டார்.

★ 1830- எக்குவாடோர் விடுதலை அடைந் தது.

★ 1846- ஐக்கிய அமெரிக்கா மெக்சிக்கோ மீது போரை அறிவித்தது.

★ 1861- பெரும் வால்வெள்ளி ஒன்று அவுஸ்திரேலியாவில் அவதானிக் கப்பட்டது.

★ 1880- நியூ ஜேர்சியில் மென்லோ பூங்கா வில் எடிசன் மின்சாரத்தில் இயங் கும் தனது முதலாவது தொடருந் தைச் சோதித்தார்.

★ 1888- பிரேசில் அடிமை முறையை இல்லா தொழித்தது.

★ 1913- நான்கு இயந்திரங்களினாலான முதலாவது விமானத்தை ஈகர் சிபோர்ஸ்கி என்ற ரஷ்யர் இயக்கி னார்.

★ 1940- இரண்டாம் உலகப்போர்: நெதர் லாந்தினுள் நாசி ஜேர்மனியர் புகுந்ததையடுத்து அதன் அரசி வில்ஹெல்மேனியா பிரித்தா னியாவுக்கும் இளவரசி ஜூலி யானா தனது குழந்தைகளுடன் கனடாவுக்கும் தப்பியோடினர்.

★ 1943- இரண்டாம் உலகப்போர்: வட ஆபிரிக்காவில் ஜேர்மனிய மற்றும் இத்தாலியப் படையினர் கூட்டுப் படைகளிடம் சரணடைந்தனர்.

★ 1952- இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவை யின் முதலாவது அமர்வு இடம் பெற்றது.

★ 1954- சிங்கப்பூரில் தேசியத்துக்கு எதிராக சீனப் பாடசாலை மாணவர்களின் போராட்டம் இடம்பெற்றது.

★ 1960- உலகின் ஏழாவது உயர மலையான தவுளகிரியின் உச்சியை சுவிட்சர் லாந்து மலையேறிகள் இருவர் முதன்முதலில் அடைந்தனர்.

★ 1967- சாகிர் உசேன் இந்தியாவின் முத லாவது முஸ்லிம் குடியரசுத் தலை வர் ஆனார்.

★ 1969- மலேசியாவில் கோலாலம்பூரில் சீனர்களுக்கும் மலே இனத்தவர் களுக்கும் இடையில் இனக் கலவரம் மூண்டது. 190 பேர் உயிரிழந்தனர்.

★ 1981- ரோமில் பாப்பரசர் இரண்டாவது ஜோன் போலைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

★ 1989- சீனாவில் தியனென்மென் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

★ 1996- வங்களாதேசத்தில் வீசிய கடும் புயலில் சிக்கி 600 பேர் வரையில் இறந்தனர்.

★ 1998- இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் சீனர்களுக்கெதிராக இனக்கலவரம் ஆரம்பமானது.

★ 1998- இந்தியா மேலும் இரண்டு அணு குண்டுச் சோதனைகளை மேற்கொண்டது. இந்தியா மீது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் பொருளாதாரத் தடையைக் கொணர்ந்தன.

★ 2005- உஸ்பெக்கிஸ்தானில் அண்டிஜான் என்ற இடத்தில் பொலிஸார் போராட்டக்காரர் மீது சுட்டதில் 187 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006- தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி 5ஆவது முறையாக தமிழக முதல்வர் பதவியை ஏற்றார்.

### பிறப்புக்கள்

★ 1882- ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (இ.1963)

★ 1905- பக்ருதின் அலி அகமது, இந்திய ஜனாதிபதி (இ.1977)

★ 1918- பாலசரஸ்வதி, பரதநாட்டிய மேதை (இ.1984)


★ 1978- மைக் பிபி, அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்.

### இறப்புக்கள்

★ 1898- பி.ஆர்.ராஜமய்யர், தமிழ் எழுத்தாளர் (பி.1872)

★ 1978- வி.தெட்சிணாமூர்த்தி, தவில் மேதை (பி.1933)

★ 2001- ஆர்.கே.நாராயணன், இந்திய நாவலாசிரியர் (பி.1906)



★ 1956- இந்தியக்குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் பிறந்த தினம்




# சிறுவர் அரங்கம்

99

## அம்புலி மாமா கதைகள்

## இரத்தம் சிந்திப் பெற்ற சுதந்திரம்



விந்தியமலைக்குத் தென்திசையில் அமைந்திருந்த தட்சிணப் பீடபூமி பல மலைத் தொடர்களும், குன்றுகளும் நிறைந்த பகுதி அது! மேற்கு கடற்கரையோரம் அமைந்திருந்த அந்தப் பிரதேசத்தில் கடல் அலைகள் காலங்காலமாக சீறிப்பாய்ந்து தாக்குவதையும் பொருட்படுத்தாமல் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிற்கும் அந்த மலைத் தொடர்கள் அங்கு வசிப்பவர்களின் வீர வரலாற்றுக்கு நினைவுச்சின்னமாக இன்றும் திகழ்கின்றன.

மலைத்தொடர்களால் சூழப்பட்டு பாதுகாப்பாக இருந்த அந்தப் பிரதேசத்தில் அன்னியர்கள் அத்தனை எளிதாகப் புக முடியாது. ஆயினும் பதினான்காம் நூற்றாண்டில் முகலாயர்கள் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

அந்தக் காலகட்டத்தில் தான் சத்ரபதி சிவாஜி தோன்றினார். சிவனேர் துர்க் எனுமிடத்தில் சாஹாஜி போஸ்லே, ஜீஜாபாய் தம்பதிக்கு மகனாகப் பிறந்த அவருக்கு குடும்பத்தின் இஷ்ட தெய்வமான சிவபவானியின் பெயரையொட்டி சிவாஜி என்று பெயரிடப்பட்டது.

குழந்தையை ஜீஜாபாயிடம் விட்டு விட்டு போஸ்லே பீஜப்பூர் சுல்தானிடம் பணிபுரிய சென்று விட்டார். சிவாஜியை வளர்த்து ஆளாக்கிய பெருமை ஜீஜாபாயைத் தான் சேரும். சிறு வயது முதலே புராண, இதிகாசக் கதைகளைத் தன் மகனுக்கு எடுத்துரைத்து அவருடைய மனத்தில் தர்மம், சத்தியம், வீரம் ஆகிய நற்பண்புகளை வளர வைத்தார்.

தாதாஜிகோண்டதேவ் சிவாஜியின் கல்விக்குப் பெரிதும் உதவினார். சிறு வயது



முதல் சிவாஜி வீரம் பொருந்திய மாவலியர்களுடன் பழகி வந்தார். அவர்களிடம் இருந்து வாட்போர், குதிரை சவாரி ஆகியவற்றைக் கற்றுக்கொண்டார். சிறிது சிறிதாக அவர்களைக் கவர்ந்த சிவாஜி இறுதியில் அவர்களுடைய தலைவராகவே மாறி விட்டார். தனது மராத்திய மாநிலத்தை முகலாயர்களின் ஆதிக்கத்திலிருந்து மீட்க விரும்பினார். தனது இலட்சியத்தை நிறைவேற்ற தனக்குக் கீழே மாவலி வீரர்களைக் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டினார்.

முகலாயர்கள் வசம் இருந்த மராத்திய ராஜ்யங்களை ஒவ்வொன்றாக மீட்கத் திட்டமிட்ட சிவாஜி அவர்களுடன் போரிட தயாரானார். போர் தொடங்கு முன் ராயரேஸ்வர் என்ற ஊரிலிருந்த சிவன் கோயிலுக்குச் சென்று தனது கட்டை விரலை அறுத்து இரத்தத்தால் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து தனது தாய் மண்ணை அன்னியர்களின் ஆதிக்கத்திலிருந்து மீட்க சபதம் எடுத்துக் கொண்டார்.

1646ஆம் ஆண்டில் முதன்முதலாகப் போர்க் கொடியை உயர்த்திய சிவாஜி தோர்ணாக் கோட்டையைத் தாக்கி அதை முகலாயரிடமிருந்து மீட்டார். முதல் வெற்றிக்குப் பின்னர் புரந்தர், ராஜ்கட், சிம்ஹகட், ர்ராய்கட் ஆகிய ராஜ்யங்களின் மீது தொடர்ச்சியாகப் போரிட்டு அவற்றைத் தன் வசம் கொண்டு வந்தார்.

தொடர்ச்சியாகப் பல வெற்றிகளைக் குவித்த சிவாஜியைக் கண்டு முகலாயர்கள் அரண்டு போயினர். உடனே அதிரடியாக சிவாஜியின் தந்தையைப் பிடித்து சிறையிலிட்டனர். ஆனால் டில்லியிலிருந்து ஷாஜஹான் எழுதியது போல் ஒரு கடிதத்தை தயாரித்து அதைக் காட்டி தன் தந்தையை விடுதலை செய்தார். பின்னர் முகலாயர்களுடன் தீவிரமாகப் போரிடத் தொடங்கி மற்றுமுள்ள மராத்திய ராஜ்யங்களை அவர்களிடம் இருந்து மீட்கும் வேலையைத் தொடங்கினார்.

திடீரென விஸ்வரூபமாக வளர்ந்து விட்ட சிவாஜியை வீழ்த்த முகலாயர்கள் அப்சல் கான் என்பவர் தலைமையில் ஒரு பெரும் சேனையை அனுப்பினர். ஆனால் சிவாஜி அந்தப் பெரும் சேனையை எதிர்த்துப் போரிடாமல் காலம் கடத்தினார். சமவெளியில் போரிட்டால் பலம் பொருந்திய முகலாய சேனையை எதிர்ப்பதுகடினம் என்பதால் அவர்கள் தங்களுடைய மலைப் பிரதேசத்தை அடையும் வரை பொறுத்திருந்தான்.

ஆனால் மலைப்பிரதேசத்தில் தன் சேனையுடன் முன்னேறிய அப்சல்கான் அங்கு சிவாஜியுடன் போரிடுவது கடினம் என்று புரிந்து கொண்டான். ஆனால் எப்படியாவது சிவாஜியை வீழ்த்த நினைத்த அப்சல்கான் தந்திரமாக ஒரு தூதனை அனுப்பி சமரசப் பேச்சுக்காக சிவாஜியை அழைத்தான். தன்னை அப்சல்கான் சந்திப்பதில் ஆட்சேபம் இல்லை என்று தூதனிடம் கூறிய சிவாஜி அவன் தன்னுடன் இரண்டு வீரர்களுக்கு மேல் அழைத்து வரக்கூடாது என்று நிபந்தனையிட்டார்.

சிவாஜியும், அப்சல்கானும் ஒரு பாசறையில் சந்தித்தனர். இரு கரம் நீட்டி சிவாஜியை வரவேற்ற அப்சல்கான் மிக நட்புரிமையுடன் சிவாஜியைக் கட்டித் தழுவிக் கொள்வது போல் பாசாங்கு செய்து, திடீரென சிவாஜியின் கழுத்தை இடது கையினால் அழுத்தி வலது கையினால் சிவாஜியைக் கத்தியால் குத்தினான். ஆனால் சிவாஜிக்கு ஒன்றும் ஆகவில்லை. உடனே சிவாஜி, அப்சல்கானை கீழே வீழ்த்திக் கத்தியால் குத்திக் கொன்றார். சிவாஜி முன் ஜாக்கிரதையாக தன் உடைக்குள் கவசம் தரித்திருந்தார். அதனால் அப்சல்கானின் கத்தி அவரைக் காயப்படுத்தவில்லை.


தளபதியை இழந்த முகலாயர்களின் சேனை கலவரமடைந்து பின்வாங்க, சிவாஜியின் வீரர்கள் அவர்களைத் துரத்திச் சென்று விரட்டினர். முகலாயர்களின் பெரிய சேனையை புறமுதுகிட்டு ஓடச் செய்த சிவாஜி, கோலாப்பூர் வட்டத்திலிருந்து பன்ஹலாக் கோட்டையைக் கைப்பற்றினார். மேலும் தன் இராச்சியத்தை விஸ்தரிக்க எண்ணி, பீஜப்பூர் சுல்தானுடன் போர் தொடுத்தார். ஆனால் சித்திசாகர் என்ற முகலாய சுல்தானிடமிருந்த படைப்பலம் மகத்தானதாக இருந்தது. ஆகையால் பீஜப்பூர் வீரர்களை வெற்றி கொள்ள முடியாது என்று தோன்றியதால், சிவாஜி போரை நிறுத்திவிட்டு தன் தலைநகருக்குத் திரும்பினான். திரும்பும் வழியில் அவர் பன்ஹலாவில் தங்கினார். சிவாஜிக்குப் பாடம் புகட்ட விரும்பிய பீஜப்பூர் சுல்தான் சுமார் 50,000 படை வீரர்களுடன் சிவாஜி தங்கியிருந்த கோட்டையை முற்றுகையிட்டார்.

முகலாய சேனையின் முற்றுகையில் இருந்து தப்ப முடியாது என்று உணர்ந்த சிவாஜி தப்பித்துச் செல்ல ஒரு திட்டம் வகுத்தார். உடனே தான் சமரசம் செய்து கொள்ள விரும்புவதாகவும் அது பற்றி விவாதிக்க வேண்டும் என்றும் சிவாஜி சித்திசாகருக்குத் தகவல் அனுப்ப, அவனும் ஒப்புக் கொண்டான். இடி, மின்னலுடன் சூறாவளிக் காற்று வீசிக் கொண்டு இருந்த ஒரு பயங்கர இரவில் பன்ஹலாக் கோட்டையில் இருந்து இரு பல்லக்குகள் வெளியே புறப்பட்டன. அதைத் தொடர்ந்து ஐந்நூறு வீரர்கள் நடந்து வந்தனர். சிவாஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான, நிகரற்ற வீரனான பாஜி தேஷ்பாண்டே அந்த சேனையை அணிவகுத்துத் தலைமை தாங்கிச் சென்றார்.

கோட்டையை விட்டு வெளி வந்த முகலாய சேனை தங்கியிருந்த பாசறைகளுக்கு அருகில் வந்த போது, சில முகலாய வீரர்கள் அவற்றைத் தடுத்து நிறுத்தினர். ஒரு பல்லக்கு ராஜபாட்டையிலும், மற்றொன்று விசால்கட் செல்லும் குறுகிய பாதையிலும் சென்று கொண்டிருந்த போது தான் இந்த சம்பவம் நிகழ்ந்தது. பிரதான சாலையில் சென்று கொண்டிருந்த பல்லக்கை சோதனை இட்ட வீரர்கள் உள்ளே சிவாஜி இருப்பதைக் கண்டு உடனே அவரைப் பிடித்துச் சென்று சித்திசாகர் முன் நிறுத்தினர்.



ஆனால் சற்று நேரத்திலேயே தாங்கள் சிறைப்பிடித்திருப்பது சிவாஜியைப் போல உருவம் கொண்ட அவருடைய வீரன் ஒருவன் என்று முகலாயர்களுக்குத் தெரிய வந்தது. நிஜ சிவாஜி தங்களை ஏமாற்றி விட்டு விசால்கட் செல்லும் குறுகிய பாதையில் தப்பித்துச் சென்று கொண்டிருந்த பல்லக்கை அவர்கள் அணுக முடியாமல்



சிவாஜியுடன் வந்த வீரர்கள் அவர்களைத் தடுத்துப் போரிட்டனர். பாஜி தேஷ்பாண்டே தலைமையில் மராட்டிய வீரர்கள் தங்கள் உயிரைத் திரணமாக மதித்து முகலாயர்களுடன் போரிட்டனர். இவ்வாறு பன்னிரெண்டு மணி நேரம் பயங்கர யுத்தம் நடைபெற்றது.

கடைசியாக வானில் வாண வேடிக்கைகள் தெரிய சிவாஜி பத்திரமாகத் தலைநகர் சென்று விட்டார் என்று மராட்டிய வீரர்கள் புரிந்து கொண்டனர். தன் உயிரை கையில் பிடித்துக் கொண்டு போரிட்ட பாஜி தேஷ்பாண்டே தங்கள் மன்னரை காப்பாற்றி விட்டோம் என்ற திருப்தியில் நிம்மதியாக உயிர் நீத்தார். தங்கள் தாய் நாட்டு சுதந்திரத்திற்காக உயிர்த் தியாகம் செய்த அந்த மராட்டிய வீரர்களின் நினைவாக போர் நடந்த இடத்திற்கு பாவன் கண்ட் என்று பெயர் சூட்டப்பட்டது.

## தென்கொரியாவில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் இலங்கைக்கு

(கொழும்பு)

தென்கொரியாவின் களியாட்ட விடுதியொன்றில் ஏற்பட்ட தீயினால் உயிரிழந்த இலங்கையர்கள் மூவரின் சடலங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விமான நிலைய அலுவலகம் குறிப்பிட்டது.

கடந்த 5 ஆம் திகதி இரவு ஏற்பட்ட தீயினால் மஹியங்கனை , மொரவக்க மற்றும் பிலியந்தலை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மூவர் தென் கொரியாவில் உயிரிழந்தனர். (அ-2)

# இனப்படுகொலையை அங்கீகரிக்கும் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பம்

## பிரான்ஸ் அரசிடம் கோரிக்கை

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் உன்னத பண்புகளை தந்த பிரெஞ்சு தேசம், ஆர்மேனிய இனப்படுகொலையினை அங்கீகரித்தது போல் தமிழீழ இனப்படுகொலையினையும் அங்கீகரிக்க கோரும் கையெழுத்துப்போராட்டம் பிரான்சில் தொடங்கியுள்ளது.

கடந்தாண்டு ஆர்மேனிய படுகொலையினை ஓர் இனப்படுகொலையாக அங்கீகரிக்கும் சட்ட மூலமொன்று பிரெஞ்சு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் மூன்றாமாண்டினை நினைவேந்தி தமிழீழத்திலும் நடந்தது ஓர் இனப்படுகொலையே என்பதனை பிரெஞ்சு அதிகாரிகளை அங்கீகரிக்க கோரும் கையெழுத்து போராட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரான்ஸ் மக்கள் பிரதிநிதிகளின் ஒருங்கிணைப்பில் இக்கையெழுத்துப் போராட்டம் தொடங்கியுள்ளது.

பிரான்சில் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்து அடுத்து நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறவிருக்கின்ற நிலையில் பிரெஞ்சு அரசியல் ஆட்சி பீடத்தினைக் கோரும் இக்கையெழுத்துப் போராட்டம் முக்கியமானதாக அமையுமென மேலும் அவர் தெரிவித்தார். (அ-2)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் I பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை புனித யாகப்பர் ஆலய சந்தி, புதுமை ஆலய சந்தியிலும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற் பகல் 4.30 மணி வரை யூபிலி மகப்பேற்று நிலையம், அடம்பன் வீதிச் சந்தியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)

# வடக்கு,கிழக்கு உட்பட 17 இடங்களில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள்

## சுற்றாடல்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உட்பட்ட 7 மாவட்டங்களைச் சேர்ந்த 17 வனப் பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளாக பிரகடனப்படுத்த சுற்றாடல்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுற்றாடல் கட்டளைச் சட்டத்திற்கு அமைய இவை பாதுகாப்பு வன பிரதேசங்களாக அரசவர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர், அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இதன்படி மன்னார் மாவட்டத்தில் உள்ள முள்ளிக்குளம் , பெரிய முறிப்பு, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு, மாங்குளம், துணுக்காய், புத்துவெட்டுவான், பனிக்கம்குளம், மட்டுவில் நாடு, முத்தவெளி ஆகிய வனப் பகுதிகள் மற்றும் திருகோணமலையிலும் சில வனப் பகுதிகள் பாதுகாப்பு வனப்பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (அ-2)

## கோத்தபாயவின் யுத்தம் என்ற பெயரில் நூல் வெளியீடு

(கொழும்பு)

கோத்தபாயவின் யுத்தம் என்ற பெயரில் தி ஐலண்ட் பத்திரிகையின் செய்தியாளர் சீ.ஏ. சந்தர பிரேம ஆங்கிலத்தில் எழுதிய நூல் எதிர்வரும் 14 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இந்த நூலில் கோத்தபாயவின் கோணத்தில் விடுதலைப்புலிகளை தோற்கடிக்க மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு வைபவம் எதிர் வரும் 14 ஆம் திகதி வோட்டர்ஸ் எச் விடுதியில் நடைபெறவுள்ளது. இவ் வெளியீட்டு நிகழ்வில் கோத்தபாய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நூலின் உப தலைப்பில் தமிழ்ப் புலிகளின் பயங்கரவாதம் என்று குறிப்பிடப் பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)



# இந்திய-இலங்கை உறவில் விரிசல் வெளிப்படத் தொடங்கிவிட்டது...!

ஐ.நா. மனித உரிமைக்கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளித்த பின்னர், இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்பட்டுள்ள நெருடல் தீவிரமடைந்து வருகிறது. இந்தியாவின் இந்த முடிவு தமக்கு ஏமாற்றத்தை அளித்த போதும், அதனால், உறவுகளில் எந்த விரிசலும் இல்லை என்று இலங்கை அரசாங்கம் கூறியிருந்தது. அதே வேளை, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்கவில்லை என்றும், அந்தத் தீர்மானம் இலங்கைக்கு எதிரானது அல்ல என்றும் விளக்கமளித்திருந்தார் சுஸ்மாசுவராஜ். ஜெனிவா தீர்மனத்துக்கு இந்தியா ஆதரவளிக்க முன்வராது போயிருந்தால், இலங்கை தொடர்பான தீர்மானம் இன்னும் இறுக்கமானதாகவே அமைந்திருக்கும் ஆனாலும் இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததை ஏற்றுக்கொள்ளும் மனோபாவத்துக்கு இலங்கை இன்னமும் வரவில்லை. தீர்மானத்தைக் கொண்டு வந்த அமெரிக்காவிடம் வளைந்து போகின்ற அளவுக்கு, இந்தியாவிடம் நெகிழ்ந்து கொடுக்கின்ற தன்மையைக் காணவில்லை.



இந்தியாவும்கூட தனது நிலைப்பாட்டில் சற்று இறுக்கமான போக்கையே வெளிப்படுத்தி வருகிறது.

13-வது திருத்தம் தொடர்பாக இலங்கையிடம் இருந்து ஒரு வாக்குறுதியைப் பெறவோ அல்லது பெற்ற வாக்குறுதியை நடைமுறைப்படுத்த வைக்கவோ இந்தியாவினால் முடியவில்லை. இந்தியாவுக்கு எந்த வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை என்று கவிழ்த்துவிட்டது இலங்கை அரசு. அதுவும் ஒன்றுக்கு இரண்டு முறை அவ்வாறான சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்த விடயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவுக்கு கிடைத்த அதே அனுப வம் சுஸ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கும் கிடைத்துள்ளது. இந்த விடயம் இந்தியாவுக்கு மிகுந்த உறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.



தெற்காசியப் பிராந்தியத்தின் வல்லரசாக இருந்தும் இந்தியாவினால், இதைச் செயற்படுத்த முடியாது போனது ஒரு தலை குனிவாகவே கருதப்படுகிறது. இந்த நிலையில் இந்தியா இறுக்கமான போக்கை வெளிப்படுத்துவது வியப் பானதல்ல. அதைவிட, இப்போது இந்தியாவில் உள்ள அரசியல் சூழல் இலங்கையை அனுசரிப்பதற்கு இடம்கொடுப்பதாகவும் இல்லை. முன்னர் வைகோ, நெடுமாறன், திருமாவளவன், ராமதாஸ் போன்றவர்கள் மட்டும் தான் தமிழீழம் பற்றியும், ஈழத் தமிழர்களின் உரிமைகள் பற்றியும் அதிகம் பேசினார்கள். இப்போது இவர்களோடு ஜெயலலிதாவும் கருணாநிதியும் கூட சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மட்டும் என்றால்கூடப் பரவாயில்லை. காங்கிரசின் தமிழ்நாடு பிரிவுகூட தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு அளிக்க வேண்டும். பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று குரல்கொடுக்கத் தொடங்கியுள்ளது புதிய திருப்பம்.

இதற்கு மத்தியில் இலங் கைக்கு வந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கருத்தும் கூட இலங்கைக்கு சார்பானதாக இல்லை.

இந்த நிலையில் இந்தியா சற்று எட்டநிற்கவே விரும்பகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஜெனிவாவை மனதில் வைத்து இந்தியாவைப் பழிதீர்க்கும் காரியங்களில் இலங்கை ஈடுபட்டு வருவதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ஜெனிவாவில் இந்தியா எதைச் செய்ததோ, அதையே நியுயோர்க்கில் திருப்பிச் செய்துள்ளது இலங்கை.

ஐ.நா.வின் ஒரு அங்கமான- நீதிக்கான அனைத் துலக நீதிமன்றத்தின் நீதிபதிகள் பதவிக்கான போட்டியில் இந்தியா சார்பில் நிறுத்தபட் பட்ட உயர்நீதிமன்ற நீதிபதி தல்வீர் பண் டாரிக்கு எதிராக இலங்கை வாக்களித்துள்ளது. வழக்கத்தில் இந்தியாவுக்கு எதிராக எப்போதுமே இலங்கை வாக்களிப்பதில்லை. ஆனால், இம்முறை பிலிப்பைன்ஸ் நிறுத்திய நீதிபதிக்கு இலங்கை ஆதரவளித்துள்ளது. இது இரகசிய வாக்கெடுப்பு என்பதால் விவகாரம் உடனடியாக வெளிச்சத்துக்கு வரவில்லை. ஆனால், அரசாங்க வட்டாரங்களே இதை வெளிப் படுத்தியுள்ளன. இது பற்றி ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹன்ன கருத்துக் கூற மறுத்துள்ளார். இரகசிய வாக்கெடுப்பு என்பதால் எதுவும் கூற முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை பிலிப் பைன்ஸ் எதிர்த்தது- இந்தியா ஆதரித்தது. இதற்காக இலங்கை பிலிப்பைன்சுக்கு நன்றிக்கடன் செலுத்தியதுடன்-இந்தியாவைப் பழிதீர்த்துக்கொண்டது. இது மட்டுமன்றி இன்னொரு விவகாரத்திலும் இழுபறி உருவாகியுள்ளது. ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்ய அமெரிக்கா விதித்துள்ள தடையை அடுத்து, சபுகஸ்கந்தை சுத்திகரிப்பு ஆலையை மறுசீரமைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு ஆகின்ற செலவுமிகப் பெரியது. அது கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டொலர். இந்த மறுசீரமைப்பு வேலையை மேற்கொள்ள இந்திய நிறுவனம் விரும்பியது. ஆனால், அதற்கான வாய்ப்பை இந்தியாவுக்கு வழங்க அரசாங்கம் மறுத்து விட்டதாகக் கூறப்படுகின்றது. அதேவேளை சீன அரச வங்கியிடம் இருந்த, வாங்கவுள்ள கடனிலிருந்து, இந்த மறுசீரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சீன அரச வங்கிகள் இலங்கைக்கு கடனையும் கொடுத்துவிட்டு அந்தக் கடனைக் கொண்டு செய்யப்படும் அபிவிருத்தித் திட்டத்துக்கான ஒப்பந்தத்தையும் தாமே பெற்றுக்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டவை. இதனால், சீனா ஒரே கல்லில் பல காய்களை வீழ்த்துகிறது. இலங்கை மீதான ஆதிக்கத்தை உறுதிப்படுத்தலாம், கடனுக்கு வட்டியும் கிடைக்கிறது. அதைவிட ஒப்பந்த வேலையை மேற்கொள்வதால் இலாபமும் கிடைக்கிறது.சீனாவின் கடன் நிபந்தனைகள் இலகுவானவை என்பதால், இந்தியாவிடம் இந்த வேலையை ஒப்படைக்க இலங்கை தயாரில்லை. சீனாவிடம் ஒப்படைக்வே விரும்புகிறது. இது போன்று இந்தியாவிடமிருந்து இலங்கை விலகிக் கொள் ளும் பல நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

**நன்றி: இணையம்**

இவை இரண்டு நாடு களுக்கும் இடையி லான உறவுகளில் நெருடல் நிலை இன்னும் தீரவில்லை என்பதற்கான அடையாளங்கள்.

இன்னும் பல விட யங்கள் வெளியே தெரிய வராமல் நடந்திருக்கலாம்.



இலங்கை-இந்தியா நாடுகளுக்கிடையிலான இந்த நெருடல்நிலை எதுவரை தொடரப் போகிறது என்பது முக்கியமான கேள்வியாக உள்ளது. ஏனென் றால், இது தமிழர் பிரச்சினைக்கான தீர்விலும் தாக்கம் செலுத்த வல்லது. எவ்வாறாயினும், இந்த இடைவெளி தமிழர்களுக்கு நன் மையாக அமையுமா-தீமையாக அமையுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

■ ■ ■ ■ ■

# பாடசாலை சேவை வாகனங்களின் தரத்தை பேணுவதற்கு திட்டம்

## தனியார் போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களினூடாக சிறந்த சேவையை வழங்குவதற்கு மாகாண சபைகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்க கூறியுள்ளார்.**

நாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களில் பெரும்பாலானவை பாதுகாப்பற்ற தன்மையுடன் காணப்படுகிறது என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதன் காரணமாக பிள்ளைகளின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களின் தரத்தை சோதனையிடுவதற்கான நிறுவனமொன்று இருக்கிறதா என்பது குறித்தும் சஜித் பிரேமதாச வினவியிருந்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகன சேவை தொடர்பாக கண்காணிப்பு செய்வதற்கும் அவற்றுக்கென தனியான நிறமொன்றை வழங்கவும் திட்டமிட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காக பயன்படுத்தப்படும் சில வாகனங்கள் உகந்த நிலையில் இல்லை. அவற்றினால் மாணவர்களுக்கு பாதுகாப்பற்றநிலைமை உள்ளது. இவை தொடர்பான பொறுப்பு மாகாண சபைகளுக்கே உள்ளது. இந்த வாகனங்கள் மாகாண சபைகளின் கீழ் உள்ள வீதிப் போக்குவரத்து அதிகார சபைகளின் கீழே பதியப்படுகின்றன.

பாடசாலை வாகனங்களினூடாக சிறந்த சேவையொன்றை வழங்குவது குறித்து மாகாண முதலமைச்சர்கள், வீதிப் போக்குவரத்து அதிகாரசபைகள் என்பவற்றுடன் இணைந்து எமது அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

பாடசாலை பேருந்துகளுக்கான தனியான நிறமொன்றை அறிமுகப்படுத்தவும் வீதிப்போக்குவரத்து சட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் கட்டணம் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசி வருகிறோம் என்றார். (அ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் சக்தி எமக்கு உண்டு

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை தேர்தலின் மூலம் தோல்வியடைய செய்ய முடியாது என தெரிந்து கொண்ட புலம்பெயர்ந்தவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது என பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு ஆதரவாகவே ஐ.தே.க. பாராளுமன்றத்தில் இந்த யோசனையை கொண்டு வந்திருக்கின்றது. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கள் போலன்றி நாட்டில் பூரண சுதந்திரம் இருக்கின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தோம். அதிலுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தும் முறைமை எம்மிடம் இருக்கின்றது. எமக்கு எதிரான சக்திகளை தூண்டிவிடவே இந்த பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

தேர்தலில் தோல்வியை தழுவிக் கொள்வோம் என்ற அச்சத்தினால் வட மத்திய மாகாணசபைத் தேர்தலுக்கு எதிராக நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது. நாட்டில் இருக்கும் ஊடகங்களில் தனி யார் ஊடகங்கள் அதிகமாக இருக்கின்றன.4 அரச ஊடகங்கள் இருக்கின்றன. எனினும் 32 தனியார் ஊடகங்கள் இருக்கின்றன. யுத்த காலத்திலும் சுதந்திரமாக கருத்துக் களை வெளியிடுவதற்கு ஊடக சுதந்திரம் இருந்தது. மனிதாபிமான நடவடிக்கைகளின் போது ஊடகங்கள் சுதந்திரமாக செற்பட்டன. இன்று அரசாங்கத்திற்கு எதிராக விமர்சிக்கின்றன. ஜனாதிபதிக்கு எதிராகவும் எழுதப்படுகின்றது. எனினும் நாம் எந்த ஊடகம் மீதும் கை வைப்பதில்லை என அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-2)

# 77 அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன

## கரு ஜயசூரிய எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள 77 அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இக் கருத்தினைக் கூறியுள்ளார். குறிப்பாக மக்கள் பணம் விரயமாக்கப்படும் விதம் குறித்தும் அரச நிறுவனங்கள் நட்டமடைவதனை அவதானிக்கும் போதும் வேதனை ஏற்படுவதாக கரு ஜயசூரிய குறிப்பிட்டார்.

சிங்கப்பூர் போன்ற நாடுகளில் செயற்றிறனான பல அரச நிறுவனங்கள் அரசியல் தலையீடின்றி இலாபத்துடன் இயங்குவதை அவதானிக்க முடிவதாக பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

அத்தகைய நிறுவனங்களில் உறவினர்களோ நண்பர்களோ நியமிக்கப்படவில்லை என்றும் உரிய செயற்றிறனுடன் அவை இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் உறவினர்களுக்கும் நெருக்கமானவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுவதாக கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார். அவற்றில் ஐந்து அரச நிறுவனங்களில் மாத்திரம் 65 ஆயிரம் மில்லியன் ரூபா மக்கள் பணம் விரயமாக்கப்பட்டுள்ளதாக கரு ஜயசூரிய மேலும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# கேரளாவில் இருந்து யாழிற்கு போதைப்பொருள்!!

## பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு இந்தியாவிலிருந்து கடல் வழியாக கடத்தப்படுவதாக காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி பெரகரா தெரிவித்தார்.

இந்தியாவின் கேரளாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு போதைப் பொருள் கடத்தல் வர்த்தகம் இடம்பெறுவது தற்போது யாழ். குடாநாட்டில் போதைப் பொருள் பாவனைகள் அதிகரித்திருப்பதற்கு முக்கிய காரணமாகும்.

இக்கடத்தல்களினை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரும் கடற்படையினரும் கூட்டு ரோந்தில் ஈடுபடவுள்ளனர்.

முக்கியமாக நெடுந்தீவுக்கடல், காங்கேசன்துறைக் கடல், பருதித்துறை கடல் பகுதிகளிலேயே இக் கூட்டுரோந்து நடைபெறவுள்ளது.

அண்மையில் இளவாலை பொலிஸாரினால் ஒருவர் 4 கிலோகிராம் கஞ்சாவுடனும் மற்றொருவர் ஒரு கிலோ கிராம் கஞ்சாவுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-4)


# மரண அறிவித்தல்

## விஜயரட்ணம் அம்சமாலனமூர்த்தி(வவா)



சுதுமலை தெற்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் அம்சமாலனமூர்த்தி (வவா) 10.05.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் மற்றும் திலகவதியார் தம்பதியரின் பாசமிகு மகனும், சத்தியதேவியின் அன்புக் கணவரும், அபிரா, அனுசன், அனோஜன், அனுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்றவர்களான சிவஞானம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரி, தயாபரன் (ஜேர்மனி), சர்வலோகநாயகி(பிரான்ஸ்), சிவமலர் (ஜேர்மனி), சாரதாதேவி, சிவமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராமசாமி,ஜெகதீஸ்வரி(ஜேர்மனி), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சிவபாலன் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான திரவியம், லோகநாதன் மற்றும் அழகரத்தினம், தர்மகுலசிங்கம்,சிவயோகராணி ஆகியோரின் பாசமிகு மைத்துன ரும், சிறிகரன்-மதிவதனி(லண்டன்), சசிகரன்(நிசாந்தன்), சசிந்தா-கணநாதன்(லண்டன்), கஜீகரன் (கஜன்), ஜசிந்தா(தர்சி),சிவந்தா-சுரேந்திரா(கொலன்ட்), சிவந்தன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற சகிந்தன் மற்றும் தரண்யா (ஜேர்மனி), யசிகா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும், தஜீபன்(ஜேர்மனி), திவ்யா(ஜேர்மனி), தனுஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், சுஜான், சுஜன்சன், கிரிசாந்(கொலன்ட்),லக்சிதா, அபினா, சயனிகா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.05.2012 ஞாயிற்றுக்கிழமை 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(8447)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### வேணுமடி நீ எனக்கு

பிஞ்சு மனத்தவளே பிடிவாதக்குணத்தவளே
கருமை விழியினுளே எனை - நாட்கணக்காய்
மறைத்தவளே ஐந்து இதழ் பூவழகி
ஆலமர விழுதழகி தஞ்சம் எனும் பார்வையிலே
எனை தவிக்கவிட்டுப்போனவளே
தேன் சொட்டும் செவ்விதழாள் செருக்கில்லா
சிரிப்புடையாள் தித்திக்கும் பேச்சாலே எனை
தெரு அளக்க வைச்சவளே
கன்னக் குழியழகி கார் மேகக் குழலழகி
கன்னக் குழிச்சிரிப்பில் காதல் மொழி தந்தவளே
போறவழி சொல்லாயோ-என் பொன்னாத்தா
நில்லாயோ வாறனடி வழித்துணையா
வஞ்சமில்லா மலர்க்கொடியாள்
கார்த்திகையாய் பிறந்தவளே -எனை
காத்திருக்க வைத்தவளே
காத்திருப்பேன் காலமெல்லாம்
வேணுமடி நீ எனக்கு

புதுமடம்
சேனா

### அவரவர் பார்வையில்

### தவிப்பு

வளரும் வயதிலே பெற்றோரை இழந்தேன்
படிக்கும் வயதில் கல்வியை இழந்தேன்
வாழும் வயதில் உன்னை இழந்தேன்
தள்ளாடும் வயதில் தனிமையை உணர்ந்தேன்

க.செல்வமலர்
சிறுவர் இல்லம்

### தள்ளாட்டம்

கிடுகிடுவென்று ஏறிடும்
விலை வாசியால்
வாழ்க்கைச் சக்கரத்தையே
தள்ள முடியாமல்
திண்டாடும் வேளையில்
நடு வீதியில் தள்ளுகின்றேன்
நான் போகும் வண்டியினை

சமி.சிந்து
வதிரி

### தீபாவளி

வெடிச்சத்தம் காதைப் பிளக்கின்றது
சிறுவர்களோ பயத்தில் ஒடுகின்றனர்
அட இன்றைக்கு தீபாவளி

கா.கோகுலன்
ஊர்காவற்றுறை

### எங்கள் முகவரி....

வலிமை சொல்லும் புன்னை மரங்கள்
தென்னந்தோப்புக்கள் நாவல் மர
காடுகள் வேலியோரக் கிளுவைகள்
தேன்சுவைப் பலாக்கள் பறவைகள்
வந்தமர்ந்து கானமிசைக்கும்
வேப்பமரங்கள் – நாவுக்கு அள்ளி
சுவை தருகின்ற மாமரங்கள்
நீங்கள் நின்ற இடம் தெரியவில்லை
சுவடு அது தேடுகின்றேன்...
இருந்தும் எங்கள் முகவரி
முல்லை நிலமே

ஆ.முல்லைதிவ்யன்

### மீண்டும் வருவேன்

என்னை துகிலுரி துவம்சம்செய்
தூக்கிலிடு தூர்ந்துபோன என் அவயவங்கி
தூக்கியெறி... என்றோ ஒருநாள்
நான் மீண்டும் வருவேன்
உன்னை இயல்பாக்கிக் கொள்ள

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### இமயம் தொட...

வாழ்க்கை வட்டமதில்
படிகளாய் இரு
பிறர் நலன் காண
உடைமைகள் சேர்
உனக்காய் அல்ல
இந்த உலகத்துக்காய்
விடிவை நோக்கி நட
சந்தர்ப்பத்தை சரியாய் பயன்படுத்து
மின்னல்கள் கணப்பொழுதில்
தோன்றி மறையும்

மாவை நா.கஜேந்திரன்

### காதல்

தொட்டிலில் ஆடும் வயதில்
தாய்ப்பால் மீது காதல்
எட்டிப் பிடிக்க இயலாத வயதில்
தட்டான் மீது காதல்
பள்ளி போகும் வயதில்
விடுமுறை மீது காதல்
பதினெட்டுத் தொடங்கும் வயதில்
பருவத்தின் மீது காதல்
முடி நரை போடும் வயதில்
முதிர்ச்சியின் மீது காதல்
ஆதி முதல் அந்தம் வரை
எத்தனை காதல் வாழ்வில்
காதல் இல்லாமல் காற்றுக்கூட
அசைவதில்லையே இங்கே!

பி.கங்கா
வண்ணார்பண்ணை

## மௌனத்தின் தேடல் - 121



### துணை நம்பி

பெற்றவளை நம்பி பிள்ளைகளும்
பிள்ளைகளை நம்பி பெற்றோரும்
ஒருவருக்கொருவர் துணையாகினர்
யார் கண்பட்டதோ
பெற்றவள் வீதியில் சரிந்துவிட்டாள்
அவள் பெற்ற பிள்ளைகள் இரண்டு
அவள் உடலோடு வீதியில்
கண்ணீரோடு இருக்கின்றனர்

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

### வருவாயா?

மானிட ஆத்மா மரணம் எய்யாது
மறுபடி பிறக்கும் என
கண்ணன் சொன்னான்
பகவத் கீதையில்
பெற்றுப் பேணி வளர்த்துவிட்டு
பாதிவழியில் சென்று விட்டாய்
பெற்ற கடன் தீர்க்க
என் வயிற்றில் சேயாக
மீண்டும் வந்து விடு...

லீலா.சிவவடிவேல்
இணுவில்

### யார் துணை

அன்போடரவணைத்து எம்மை
ஆசையோடு வளர்த்த அம்மா
இன்று நித்திரைபோல் நிலத்தில்
செத்துக் கிடக்கின்றாள்
பிரிவுத்துயர் தாங்காது
தேம்பி அழும் பிள்ளைகளை
துணை நின்று காப்பதுயார்?

துரை
தென் மட்டுவில்

### கலங்காதே

மூட்டை முடிச்சுக் கட்டி
மீள் குடியேறிய போதும்
முந்நூறு தடைகள் எம்முன்னால்
எழுந்துநிற்குதேயென கலங்காதே
வேதனையை சாதனையாக்குவதே
மனிதவரலாறு என்பதை தெரிந்து
துணிவோடு எதிர்த்துப் போராடு
வெற்றி நாளை உன்கையில்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### உயிர் எங்கே

வெளிச்சம் தொலைக்கப்பட்ட
எங்கள் வாழ்க்கையில்
இழப்புக்களே தொடர்
கதையாகிறதே...
என் கருவறைத் தோழியே...!
என் ஜனனத்தின் மறைவிடமே!
எங்களை தவிக்கவிட்டு என்
உயிர் பிரிந்து சென்றதுதான்
எங்கே?

ஆலின் ஷானுகா
யாழ்ப்பாணம்

### யாருமில்லை

இடைநடுவில் தவிக்க விட்டு
எங்குதான் நீ சென்றாய்
அரவணைக்க யாருமில்லை
அழுகின்றோம் நாங்களிங்கே
அன்பான நம் சொந்தமெல்லாம்
அரக்கர்களின் பிடியினிலே
அழிந்து விட்டால்
தங்குதற்கு இடமுமில்லை
தவிக்கின்றோம் நாம் இங்கே
எழுந்துதான் எமைப் பாரம்மா

திருமதி சந்திரன் தேவி
மானிப்பாய்

### சோகம்

காப்பது தாய் என்று
இயற்கை சொன்னால்
நீதி கேட்பது நீங்கள்தான்
என்றுமெய்மை சொல்கின்றது
குழந்தைகளே
அன்புக்கு உதாரணம் அன்னை
இறப்பின் காரணம் என்ன?

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### துயரம்

விழித்திருக்கும் சூரியன்
வீசும் ஒளியை
வீதியிலே அமர்ந்திருக்கும்
விண்மீன்கள் தாங்குமோ

யோ.யாழவன்
யா/நெல்லியடி ம.ம.வி

### தயாரா???

அத்திவரா நிழலும்
உறங்குவதற்கு விழிகள்
தயார்-இவர்களை
உண்மையான வீட்டு நிழலிலே
உறங்க வைக்க தயாரா?

துஷாந்தி.சுதாகர்
கற்கோவளம்

### பாதுகாப்பாரா

எம் பசியைப் போக்க
எம்மைக் கூட்டிச்சென்றாள்
தன் பசியின் கொடுமையால்
பாதிவழியில் உயிரைவிட்டாள்
பரதேசிகளாய் ஆனோம்
பரந்த உலகினிலே
படைத்தவர் எம்மை பாதுகாப்பாரா

திருமதி.மேரிஅல்போன்சா
குருநகர்

### முதிர்ச்சி

பழம் பழுத்துத்தான் விழுந்து கிடக்கிறது
பிஞ்சுகள் வெம்பி விழாமல் பழுக்க
முயற்சி எடுப்போம்

ராசாவி
அல்வாய்

### விடியலைத்தேடி

கடந்த சில காலங்களைத் தாண்டி
நடந்து வந்த பாதையிலே
இளமையில் கணவனை இழந்து
தவிப்பவர்களை கண்டு வந்த
எங்கள் அம்மாவே!
அவர்களின் துயரங்களுக்கு
சோகத்தில் புலம்பினீரே
இன்னும் நாங்கள் சிறிது
தூரம் செல்லுமுன் வீழ்ந்துவிட்டாயே
நீ மீண்டும் எழுந்து எங்களுடன்
வரவில்லை என்றால் எங்கள்-
எதிர்காலம் என்னவாகும்

சு.சுபாஜினி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் -122



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 18.05.2012 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

**MMBL**
**Money Master**
Company Registration No.P.V 986

**கோபி ஏஜென்சி புதுக்குடியிருப்பில் உதயம்...**

**WESTERN UNION**
மணி டிரான்ஸ்பர்

வேகமாகவும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும்

**வெஸ்டர்ன் யூனியன் மூலம் உலகெங்கும் இருந்து அனுப்பும் பணத்தினை ஒரு சில நிமிடங்களில் கோபி ஏஜென்சியில் பெற்றுக்கொள்ளலாம்**

**வெஸ்டர்ன் யூனியனால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது புதுக்குடியிருப்பு மற்றும் அதனை அண்மித்த பகுதி மக்களுக்காக!**




நம்பிக்கை! நாணயம்! பாதுகாப்பு!

# கோபி ஏஜென்சி

பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு சந்தி, புதுக்குடியிருப்பு

(SC-5967)

- பல வருடங்களாக வெஸ்டர்ன் யூனியன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பணப்பரிமாற்றம் சேவையினை வழங்கி வருகின்றோம்.
- வெளிநாட்டிலிருந்து 10 இலக்கங்கள் கிடைத்த உடனேயே கோபி ஏஜென்சியை நாடுங்கள்.
- ஒரு சில நிமிடங்களில் பணத்தினை பெற்று வீடு செல்லலாம்.
- விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும் (ஞாயிறு தவிர்ந்த)

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:—0243248979, 0777343300**

அலுவலக நேரம்: திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை

**தலைமைக்காரியாலயம்:-**

WESTERN UNION
MONEY TRANSFER

# கோபி ஏஜென்சி

WESTERN UNION

33,மில் வீதி, வவுனியா.024 2225888/024 2222411

வெஸ்டர்ன் யூனியனின் பிரதான முகவர் MMBL மணி டிரான்ஸ்பர்
பிறைவேட் லிமிட்டட் 7 ஆம் மாடி, எய்ட்கென் ஸ்பென்ஸ் டவர்-II
இல.315,வொக்சோல் வீதி,கொழும்பு-02. உடனடி அழைப்பிற்கு-0115529999

# தேசிய நல்லிணக்கம் மக்களால் ஏற்கக்கூடியதாக அமைய வேண்டும்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை புலம்பெயர்ந்தவர்களின் நிகழ்ச்சி நிரல் என அரசாங்கம் கூறுமேயானால் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை புலம்பெயர்ந்தோரின் நிகழ்ச்சி நிரலின் கீழ் தான் ஜனாதிபதி நியமித்தார் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டு வரப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் 17 ஆவது திருத்தம் மற்றும் பொது ஆணைக்குழுக் களை நிறுவுதலை வலியுறுத்துவதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லிணக்க ஆணைக்குழு அமைக் கப்பட்டு சிபாரிசுகளும் முன்வைக்கப்பட்டிருக் கின்ற நிலையில் மீண்டும் மீண்டும் குழுக் களை நிறுவிக் கொண்டிருப்பது பிரச்சினை களுக்கு தீர்வாக அமையாது என குறிப்பிட்ட சுமந்திரன் எம்.பி கோட்டாவின் யுத்தம் என்று வெளியாகியுள்ள ஒரு நூலில் தமிழ்ப் புலி களின் பயங்கரவாதம் எனக் கூறப்பட்டிருக் கின்றமையின் பின்னணியில் நல்லிணக் கம் எவ்வாறு சாத்தியமாகும் எனவும் கேள்வி எழுப்பினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை என்ற காரணத் தினால் அந்த குழுவினரே இன்று கவலை வெளியிட்டிருக்கின்றனர்.

சர்வதேச சட்ட திட்டங்களை மீறுவதானது சாதாரண விடயமல்ல. எனவே அவ்வாறு மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தினரால் கேள்விகளை எழுப்ப முடியும்.

தற்போது விவாதிக்கப்படுகின்ற இந்த பிரேரணை புலம்பெயர்ந்தோர் நிகழ்ச்சி நிர லுக்கு அமையவே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இங்கு கூறுகின்றார்.

தேசிய நல்லிணக்கம் குறித்து அரசாங் கம் அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கின்றது. அது மக்களால் ஏற்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

நிலங்கள் பலவந்தமாக அபகரிக்கப் படுகின்ற போது எவ்வாறு இது சாத்தியமாகும். தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நம்பகத் தன்மை வாய்ந்த தீர்வுகளே இங்கு எட்டப்பட வேண்டும்.

தீர்வினை வலியுறுத்தி தற்போது சிபா ரிசுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்ற நிலை யில் இதனை மீளாய்வு செய்வதற்கு மேலும் ஒரு குழுவை அமைப்பது அவசியமற்ற தாகும். தொடர்ந்து குழுக்களை அமைத்துக் கொண்டே செல்வதானது பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

அதேபோன்று அண்மையில் வெளி யான கோட்டாவின் யுத்தம் என்ற நூலின் உப தலைப்பில் தமிழ்ப் புலிகளின் பயங்கரவாதம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்வா றான செயற்பாடுகள் மக்களிடத்தில் நல்லி ணக்கத்தை ஏற்படுத்தப்போவதில்லை என சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல் லூரியின் பவளவிழா எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி கல்லூரியின் பாவலர் துரை யப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்தப் பவளவிழா தொடர்பான ஆலோ சனைக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளதாக பவள விழாக் குழுத்தலைவர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-9)

# பாரம்பரிய கைத்தொழில்கள் அமைச்சின் செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆராய்வு


பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச் சினூடாக முன்னெடுக்கப்பட்டு வரும் செயற் றிட்டங்கள் மற்றும் ஏதிர்காலத்தில் முன்னெ டுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர் பான உயர்மட்ட கலந்துரையாடலொன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமை யில் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில் கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சின் கீழான பனை அபி விருத்திச் சபை, தேசிய வடிவமைப்பு நிலை யம். தேசிய அருங்கலைகள் பேரவை, கைத் தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் வட கடல் நிறுவனம் ஆகிய நிறுவனங்களினது நடப்பாண்டு செயற்றிட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

மஹிந்த சிந்தனைக்கமைவாக நாடளா விய ரீதியில் மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் சிறிய மற்றும் நடுத்தரக் கைத் தொழில் துறைகளை வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக எதிர்காலங்களில் அபிவிருத்தி செய்வது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சர் விசேட கவனம் செலுத்தினார்.

இதன் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனங் களும் ஜனாதிபதியினது சிந்தனைக்கமை வாகவும் மக்களினது நாட்டினதும் பொரு ளாதார மேம்பாட்டைக் கருத்திற் கொண்டும் தமது பணிகளை ஆற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அமைச்சின் கீழான குறிப்பிட்ட நிறுவ னங்களினது தலைவர்கள், பொது முகாமை யாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்தவர்கள் ஊடாக அவர்களது தேவைகள், கோரிக் கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப் பட்டன. (அ-2)



தம்புள்ள பள்ளிவாசல் சம்பவத்தை கண்டித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் ஒன்றை கையளிப்பதற்காக பொது மக்களின் கையெழுத்துக்களை திரட்டும் வேலைத்திட்டம் ஒன்று நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தினால் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது காத்தான்குடியின் அரசியல் பிரமுகர்கள் உட்பட பொது மக்களும் கையெழுத்திடுவதைப் படத்தில் காணலாம்.

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# கனேடிய பிரஜை கொலை குறித்து முழுமையான விசாரணை அவசியம்

## இலங்கைக்கான கனடாவின் தூதுவர் வலியுறுத்து

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் பகுதியில் கடந்த வாரம் ஒரு கனேடிய பிரஜை கொலை செய்யப்பட்டமை குறித்து இலங்கை முழுமை யான விசாரணை நடத்த வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாக இலங்கையின் கனடாவின் தூதுவர் புரூஸ்லெவி பிபிசியிடம் கூறி யுள்ளார்.

போர்க்காலத்தில் தாம் இழந்து போன தமது குடும்ப சொத்துக்களை மீளப் பெறும் நோக்கத்துடன் கனடாவின் பிரஜையான அந்த இலங்கைத் தமிழ் வம்சாவளியை சேர்ந் தவர் அங்கு வந்திருந்த போது கொல்லப் பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

கடந்த வாரம் நடந்த இந்த கொலை குறித்து ஒரு முழுமையான புலனாய்வு நடத் தப்பட வேண்டும் என்றும் அதனை கனடா தொடர்ச்சியாக அவதானித்து வரும் என்றும் தான் முறைப்படியான ஒரு குறிப்பை அர சாங்கத்துக்கு அனுப்பியுள்ளதாக லெவி கூறியுள்ளார்.

கிளிநொச்சி நகரில் கடைகளை வைத் திருந்த செல்வந்தரான அவரது குடும்பம் போர் காலத்தில் கனடாவுக்கு சென்று குடி யேறியுள்ளது.

ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளால் கைப் பற்றப்பட்ட இவரது சொத்துக்கள் தற்போது இலங்கையின் பிரபல அங்காடி கடைகளை வைத்திருக்கும் ஒரு நிறுவனம் மற்றும் ஏனைய சிலரின் கைகளில் இருக்கின்றன.

தனது காணியை மீளப்பெறுவதற்காக இலங்கை வந்த அவர் அதில் ஒரு கட்டடத்தை கட்டிக்கொண்டிருந்த போது கொலை செய் யப்பட்டுள்ளார்.

நாடு திரும்ப விரும்பும் அகதிகளை வர வேற்று அவர்களை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் இந்த வாரத் தில் கூறியிருந்தது. ஆனால் இப்படியான சம்பவங்கள் அகதிகள் திரும்ப வருவதை தவிர்க்கச் செய்யும் என நம்பலாம். (அ-2)

சமயம் மாறுபவன் தலைபோனபின் இன்ன தெனத் திரும்பிப் பார்க்கும் ஈயை ஒப்பான்.
- பட்லர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சிவசேனை பற்றி இந்து இளைஞர்கள் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது

ஒருபுறம் மத மாற்றம். மறுபுறம் சிலை வைப்பு. இன்னொரு புறத்தில் இந்து சமய விக்கிரகங்கள் உடைப்பு. இப்பியாக நாலா திசையில் இருந்தும் இந்து சமயத்தை நோக்கி பல்குழல் எறிகணைத் தாக்குதல் நடத்தப்படுகின்றது.

வரலாற்றுப் பெருமைமிக்க இந்து ஆலயங் களின் சிறப்பை சின்னாபின்னப்படுத்த பகீரத முயற்சிகள் நடைபெறுகின்றன.

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் திட்டமிட்ட ஆக்கிரமிப்புகள் நடந்தேறுகின்றன.

ஏன்தான் இப்படி என்று இந்து இளைஞர்கள் ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

அறிக்கைகளில் ஆசிச் செய்திகளில் சைவத்தை வளர்க்க முடியும் என்று யாரேனும் நினைத்தால் அதுதான் மிகப் பெரும் மடமைத்தனம்.

சில இந்து அமைப்புகள் தாங்கள் மட்டுமே இயங்கவேண்டும் என்ற நினைப்போடு செயற் படுகின்றன.

அறிக்கை எழுதி தங்கள் இருப்பைக் காட்டிக் கொள்வதான செயற்பாடுகள் ஒருபோதும் வெற்றிதரா.

இன்று இந்து சமயத்தை வீழ்த்துவதில் மத மாற்ற அமைப்புகள் மிக வேகமாகச் செயற்படு கின்றன.

தத்தம் சமயம் சார்ந்த சிலைகளை புதுப்புது இடங்களில் நிறுவி உரிமை கொண்டாட இந்த அமைப்புகள் களத்தில் இறங்கிவிட்டன.

அவர்கள் இங்கு சிலைவைக்க இந்துக் கோயில்களில் இருக்கக்கூடிய பெறுமதியான விக்கிரகங்கள் களவாடப்படுகின்றன. இதைத் தடுப்பதற்கு யாருமே இல்லை.

பொதுவில் இந்து சமயத்தின் பெயரால் இயங் கக்கூடிய அமைப்புகள் சைவ சமயத்தைக் காப் பாற்றத் தவறிவிட்டன.

வெறும் அறிக்கைகளில் இந்து சமயத்தைக் காப்பாற்ற முடியுமென்று இவர்கள் நினைப்பார் களாயின்,

அதனைச் செய்வதற்கு பெரிய பெரிய பெயர் களில் இந்து அமைப்புகள் தேவைப்படாது என்றே கூறவேண்டும்.

இந்து அமைப்புகள் இயங்குகின்றன எனில், திருக்கேதீஸ்வரத்தில் பிற சமய ஊடுருவல் நடந்தது எப்படி? யாழ்ப்பாணத்தில் இந்து ஆலய விக்கிரகங்கள் அழிக்கப்படுவது எங்ஙனம்?

எல்லாம் வெறும் படோபகாரங்களே அன்றி வேறில்லை.

எனதருமை இந்து இளைஞர்களே! நீங்கள் நாவலரின் பாதையில் சிவசேனை பற்றிச் சிந் திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

இந்து அமைப்புகள் இயங்கா அமைப்புகளா கிவிட்டால் தாங்களும் செய்யாமல் உங்களை யும் செய்யவிடாமல் தடுப்பார்கள். இனியும் நீங்கள் பொறுத்துக் கொள்ளல் கூடாது.

உங்கள் பிறப்புச் சமயமான இந்து சமயத்தைக் காப்பாற்றுவது உங்கள் கடமை. அதற்காக பிற சமயங்களை நிந்திக்க வேண்டாம். இந்துக் கடவு ளர்களின் சிலைகளை புதுப்புது இடங்களில் பிரதிஷ்டை செய்ய வேண்டாம்.

ஆனால் வரலாற்றுப் பெருமைமிக்க இந்து ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களுக்குள் ஊடுருவும் சிலைகளை அனுமதிக்காதீர்கள். இதை நீங்கள் செய்யத் தவறினால் இந்து சமயத்தின் எதிர்காலம் வேதனையானதாகவே அமையும்.

# கோடீஸ்வரர்களை அரசு பாதுகாக்கிறது

## ரவி எம்.பி. குற்றச்சாட்டு

100 மில்லியன் ரூபாயுக்கு மேல் அரச வங்கிகளிடம் இருந்து கடன் பெற்றுக்கொண்டு அதனை மீளச் செலுத்தாதவர்களின் பெயர்களை வெளியிட வேண்டுமென நாடாளு மன்ற உறுப்பினர் ரவி கருணாநா யக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டியூ குணசேகர,

அரச வங்கிகளில் இருந்து கடன் பெற்றுக்கொண்ட கோடீஸ்வர வர்த்தகர் கள் வங்கிக்கு 15 ஆயிரத்து 422 மில் லியன் ரூபா செலுத்தவேண்டியுள்ளது.

இதில் மக்கள் வங்கிக்கு 9 ஆயி ரத்து 909 மில்லியன் ரூபாயும், இலங் கை வங்கிக்கு 4 ஆயிரத்து 722 மில் லியன் ரூபாயும் இலங்கை அபிவிரு த்தி வங்கிக்கு 811 மில்லியன் ரூபாயும் செலுத்தப்பட வேண்டியுள்ள்தாக தெரி வித்தார்.

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் பதில ளிக்கையில், வங்கி கொடுக்கல் வாங்க லில் உள்ள இரகசியத் தன்மையை பாது காக்க வேண்டியது கட்டாயம் என்பதால் பெயர் விபரங்களை வெளியிட முடி யாது எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறான பாரிய மோசடிக்காரர் களை அரசாங்கம் பாதுகாத்துக் கொண்டு சிறிய அடகு ஒன்றை மீட்டுக் கொள்ள முடியாத நடுத்தர மக்களை அரசாங்கம் மேலும் துன்பப்படுத்தக் கூடாது என ரவி கருணாநாயக்க எம்.பி. இதன்போது மேலும் தெரிவித்தார். (அ-2)

## ஜொனியன்ஸை வீழ்த்தியது ஸ்ரான்லி

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக் கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஸ்ரான்லி அணி 133 ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்று காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத் தில் கல்லூரி அதிபர் எழில்வேந்தன் தலை மையில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரான்லி அணியினர் முதலில் துடுப்பெ டுத்தாட தீர்மானித்தனர்.

இதன்அடிப்படையில் 45.4 ஓவர்கள் முடிபில் 232 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்டுக்களையும் இழந்தனர்.

அதிகபட்சமாக எஸ்.குணதாஸ் 59 ஓட்டங்களையும், ரி. கஜதீபன் 28 ஓட்டங்க ளையும், எஸ்.அனோஜன் 18 ஓட்டங்க ளையும் அதிகபட்சமாக ஸ்ரான்லி அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

ஜொனியன்ஸ் அணி சார்பாக ரதீசன் 7 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், வி.காண்டீபன் 6 ஓவர்கள் பந்துவீசி 41 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி யினர் 28.3 ஓவர்கள் முடிபில் 99 ஓட் டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்கள்ளை யும் இழந்தனர்.

அதிகபட்சமாக லவேந்திரா 25 ஓட்டங் களையும், அன்புஜன் 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

ஸ்ரான்லி அணி சார்பாக எஸ்.துஷியந் தன் 6.3 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங் களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஜெ.ரஜீவ் 6 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டங்களு க்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகன்விருதினைஸ்ரான்லிஅணி யின் எஸ். குணதாஸ் பெற்றுக்கொண்டார்.

இன்றைய போட்டியில் சிறிகாமாட்சி விளையாட்டுக் கழகமும் திருநெல்வேலி கிரிக் கெட் கழகமும் மோதுகின்றன. இப் போட்டி காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (எ-11)


## துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

யாழ். பல்கலைக்கழகத்தினால் நடத் தப்படுகின்ற அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான துடுப் பாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற் றுக்கிழமை நடைபெறவுள்ள போட்டி யில் போட்டி 1 இல் வெற்றி பெற்ற அணியை எதிர்த்துப் போட்டி 2 இல் வெற்றி பெற்ற அணி மோதவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ்.துடுப்பாட்ட நடுவர்கள் சங்க தலைவர் பி.முருகவேள் விருந்தினராக கலந்துகொண்டு போட்டி யினை ஆரம்பித்து வைக்கவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக சுற்றுப்போட்டிக் குழு செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே



ஐம்பொறி யைய டக்கிடல் வீரமே
வெம்ப கையை விடுவது வீரமே
நம்பன் பாதத்தை நண்ணுதல் வீரமே
தம்மைத் தம்மால் அறிவது வீரமே
கண்ணைப் போலறங் காப்பது வீரமே
மண்ணைப் பெண்ணை மறப்பது வீரமே
விண்ணைப் போல விளங்குதல் வீரமே
எண்ணம் யாவும் இறப்பது வீரமே
ஓதியோதி யுணர்வது வீரமே
சாதி பேதந் தவிர்வது வீரமே
நீதி நூல்வழி நிற்பது வீரமே
ஆதி பாதம் அணைவது வீரமே

## மனிதர்களால் விளையும் காயங்களை மணலிலும் நன்மைகளைப் பாறைகளிலும் எழுத கற்றுக்கொள்வோம்

இன்றைய நற்செய்தியில் இயேசு நம்மோடு நட்பாக, நண்பனாக இரு க்க ஆசைப்படுவதைப் பார்க்கின்றோம். உலகில் உறவின் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பது நட்பு. நண்பர்கள் ஒவ் வொருவருடைய வாழ்க்கையையும் செதுக்கும் சிற்பிகள் என்பார்கள். நட் பின் சிறப்பை உணர்ந்த "இயேசு, தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப் பதைவிட சிறந்த பண்பு யாரிடமும் இல்லை" என்றார். தன்னைக்காட்டிக் கொடுத்தவரையும் "தோழா, எதற்காக வந்தாய்?" என்ற இயேசுவின் உயிரை உறைய வைத்த அந்த வார்த்தைகள் பகைவனையும் பதறவைத்துவிட்டது. இவ்வாறு இயேசு பகையைக்கூட நட் பாகமாற்றவேண்டும். இருக்கின்றநட்பை, உயிரைக்கொடுத்தேனும் வளர்க்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்து கிறார்.

இன்று எங்கள் வாழ்க்கையை உடைத்து உருக்குலைப்பதும் நண்பர் களே என்பவர்களும் உண்டு. உயிரை

### பரமபிதா காட்டிய பாதை

வாங்குகின்ற நட்பு பல வடிவங்களில் மாறுவேடங்களில் அலைவதைப் பார்க் கின்றோம். சுயநலம் என்ற போர்வை யில், பணம், பதவி ஆசையில் காட்டிக் கொடுக்கும் துரோகங்கள் நட்பில் நடந் தேறுகின்றன. அத்துடன் நயவஞ்ச கம் காட்டி நண்பனை கொலை செய் வோரையும் நாம் இன்று காண்கின்றோம்.


இந்த இடத்தில் ஒருமுறை நான் நட்புப் பற்றிவாசித்த ஒரு கதையை சொல்லித்தான் ஆகவேண்டும்; இர ண்டு நண்பர்கள் பாலைவனத்தினூ டாக பயணித்துக் கொண்டிருந்தனர். பாதிவழியில் இருவருக்குமிடையில் வாக்கு வாதம் பலமாகிச்செல்ல திடீ ரென ஒருவர் மற்றவரது கன்னத்தில் பளாரென அறைந்தார். அப்பொழுது தாக்கப்பட்டவர் "இன்று எனது உற்ற நண்பன் எனது கன்னத்தில் அறைந்து விட்டான்" என்று மணலில் எழுதினார். பின்னர் இருவரும் பாலைவனத்தில் நீர் பகுதியைக் காணும் வரை தொடர்ந்து நடந்துகொண்டே சென்றனர். இறுதியில் நீர் பகுதிக்குள் இறங்கிக் குளித்துக் கொண்டிருக்கும் போது அடிவேண்டி யவர் சேற்றுக்குள் திடீரென மூழ்கத் தொடங்கினார். உடனே அறைந்தவர் அவரை மிகுந்த கஷ்டத்துடன் இழுத் தெடுத்துக் காப்பாற்றினார். அப்போது "இன்று எனது உற்ற நண்பன் எனது உயிரைக் காப்பாற்றினார்" என்று எழுதினார். இதையும் கண்ணுற்ற அறைந்த நண்பன் "நான் உன்னைக் காயப்படுத்தியபோது மணலில் எழுதி னாய். இப்பொழுது கற்பாறையில் எழுதி னாய். இது ஏன் என வினவினார்".

அதற்கு மறுமொழியாக மற்றவர் கள் எம்மைக் காயப்படுத்தும்போது நாம் மணலில் எழுதவேண்டும். அதனை மன்னிப்பு என்னும் காற்று அங்கே தடயமில்லாது அழித்துவிடும். ஆனால் மற்றவர்கள் எமக்கு நன்மை செய்யும் போது கற்பாறையில் செதுக்கிவிட வேண் டும். அதனை எந்தப்புயற்காற்றும் அழி த்துவிடாது என்று பதில் கூறினார்.

மன்னித்து ஏற்கும் பண்பும் நட்பின் அடையாளம்தானே. நாம் இயேசுவைக் காயப்படுத்தும் போதெல்லாம் அரவ ணைத்திட முன்வந்தார். நம்மைத்தேடி வந்துகொண்டிருக்கிறார். தேடிவரும் கடவுளைநாம்தேடிச்செல்லும்போதுஅங்கே நட்பும் அன்பும் உருவாகும். பாசக்கயிற் றினால் நாம் பிணைக்கப்ப டுவோம்.

இன்றைய நற்செய்தி இயேசுவோடு ஒருவர் கொண்டுள்ள உறவை இரண்டு வடிவங்களில் காட்டுகின்றது எனலாம். "பணியாளர்" - "நண்பன்' எம் விசுவாசப் பய ணத்தில் இந்த வடிவத்தில் ஏதாவது ஒன்று முன்னிலை பெறும் என்பது உண் மையே.

இயேசு நம்மோடு நண்பனாக இருக்கவே ஆசைப்படுவதை நற்செய்தி யில் பார்க்கிறோம். "இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்ல மாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன் னது என்று பணி யாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என் றேன்" நட்பை வளர்ப்போம். உயிரைக் கொடுத்தும் நண்பனைக் காப்போம்.



இதற்குத்தான் இயேசு "நீங்கள் என் னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான் தான் உங் களைத் தேர்ந்து கொண்டேன்" என்கிறார். நமது கிறிஸ்தவ வாழ்வும் நமது பணியும் நமக்கு இறைவன் தந்தி ருக்கிற தனிப்பட்ட அழைப்பு அனைத் தும் இறைவனின் கொடை.

"நீங்கள் கனிதரவும் நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற் படுத்தினேன்" இறைவன் நம்மைத் தேர் ந்துகொண்டதன் நோக்கம் நாம் பிற ருக்குப் பயனுள்ள வகையில் கனி தர வேண்டும் என்பதற்காகவே. எனவே, நேர்மையோடு பிறருக்குப் பயன்தரும் வகையில் நாம் வாழ்வோம். பகை வரைக் கூட நண்பனாக மாற்றுவோம்.

ம. பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(10.05.2012 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
3. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. கபீப் பாங்க் லிமிடெட்
10. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜி
16. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
17. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
18. த கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
24. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
6. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
7. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
8. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் பிஎல்சி
9. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
10. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
11. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
12. கப்பிட்டல் எலையின்ஸ் பினான்ஸ் பிஎல்சி
13. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
14. கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
15. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
16. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
17. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
18. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
19. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
20. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
21. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
23. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
24. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
25. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட்
26. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
27. த ஸ்ராண்டட் கிறடிற் லங்கா லிமிடெட்
28. திவச பினான்ஸ் லிமிடெட்
29. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
30. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
31. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
32. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் பிஎல்சி
33. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
34. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
35. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
36. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
37. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
39. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
40. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
41. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
42. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
43. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா. 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(அ/6588)

# 10 வருடங்களில் அரச வங்கிகளில் 125 பில்லியன் ரூபாய் நட்டம்

## ஐ.தே.க.தெரிவிப்பு

கடந்த 10 வருடங்களில் இரண்டு அரச வங்கிகளில் 125 பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் இந்த விடயம் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியினால் வெளிப்படுத்தப்பட்டது.

இந்த தொகையானது கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை விட அதிகமானதாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சமுர்த்திபயனாளிகளுக்காக 8.8 பில்லியன் ரூபாய்களையே செலவிடுகிறது.

எனினும் கடன் பெற்ற பல்வேறு பாரிய நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் கடனை திரும்பச் செலுத்தாமை காரணமாகவே இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியன 125 பில்லியன் ரூபாய்கள் நட்டமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 400 இற்கும் அதிகமானோருக்கு அ.அட்டைகள் வழங்கப்பட்டன

(பூநகரி)

பவ்ரல் அமைப்பின் ஒழுங்கு படுத்தலில் கடந்த 8 ஆம் திகதி பூநகரி செயலர் அலுவலகத்தில் நடைபெற்ற தேசிய ஆட்பதிவு திணைக்கள நடமாடும் சேவையில் நூற்றுக்கணக்கானோர் பயன்பெற்றனர் என ஆட்பதிவு திணைக்கள பிரதி ஆணையாளர் ஜி.ஏ. ஆர். தேவப்பிரியா தெரிவித்துள்ளார்.

பவ்ரல் அமைப்பின் அனுசரணையோடு இடம்பெற்ற இச்சேவையில் புதிய ஆள் அடையாள அட்டை பெறுவோர், திருத்தங்கள் செய்வோர், தொலைந்த அடையாள அட்டைக்காக மீள் அட்டை பெறுவோர் என 400 இற்கும் மேற்பட்ட பொதும்க்கள் பயனடைந்துள்ளனர்.

மேற்படி இந்நிகழ்வில் பூநகரி கோட்ட மட்டத்திலுள்ள உயர்தர வகுப்புக்களை கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான புதிய அடையாள அட்டை வழங்கல் நடைமுறைகள் பற்றி திணைக்கள அமுலாக்கல் உத்தியோ கத்தர் த.குகதாஸ் விளக்கினார். (அ-7-84)

# கொழும்பு துறைமுக விரிவாக்கத்தை பார்வையிட மக்களுக்கு அனுமதி

கொழும்பு துறைமுகத்தை விரிவாக்கும் செயற்றிட்டத்தை காணப்பதற்கு இன்றும் நாளையும் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. இந்த நடவடிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்கொள்ளப்படுவதாக துறைமுக அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை துறைமுக அதிகார சபையின் விகாரை வீதியில் உள்ள நுழைவாயில் ஊடாக கொழும்பு துறைமுகத்தை விரிவாக்கும் பகுதிக்கு செல்ல முடியும். அங்கு நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய நீரூடான பாதையில் பொதுமக்கள் பயணிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு விசேட போக்குவரத்து சேவையும் துறைமுக அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (அ-2)



வெசாக் பண்டிகையை முன்னிட்டு அலரிமாளிகையில் நடைபெற்ற அன்னதான நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு உணவு பரிமாறுவதைப் படத்தில் காணலாம்.

# இணைந்த கணித பயிற்சி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தரம் 13 மாணவர்களுக்கான மாகாண மட்ட 3 ஆவது, 4 ஆவது இணைந்த கணிதம் பகுதி I, இணைந்த கணிதம் பகுதி II பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார்.

மூன்றாவது பயிற்சிப்பட்டறை பகுதி I, பகுதி II என்பன எதிர்வரும் 16 ஆம் திகதியும் 17 ஆம் திகதியும் புள்ளிவிபரவியல் தாயங்கள் நீங்கலாக முழுப்பாடத்திட்டமும் நடைபெறும்.

நான்காவது பயிற்சிப் பரீட்சைகள் பகுதி I, பகுதி II என்பன எதிர்வரும் ஜூன் மாதம் 13 ஆம் திக தியும் 14 ஆம் திகதியும் முழுப்பாடத்திட்டமும் நடைபெறும். இப்பயிற்சி பரீட்சைகள் யாவும் அவ்வப் பாடசாலைகளிலேயே நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# கொல்கத்தாவை வீழ்த்தி மும்பை அபார வெற்றி



ஐ.பி.எல். தொடரின் 58-வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் நேற்று மாலை 4 மணிக்கு கொல்கத்தாவில் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிபு செய்தது.

ஆரம்ப வீரராக களமிறங்கிய சச்சின் 2 ஓட்டங்களை மட்டுமே எடுத்து வெளியேறினார்.

அதன்பின் ரோகித் சர்மா கிப்ஸுடன் ஜோடி சேர்ந்தார். கிப்ஸ் பொறுமையாக ஆட ரோகித் சர்மா 52 பந்துகளில் சதம் கடந்தார்.

கிப்ஸ் அரைச் சதம் கடந்தார்.

கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ரோகித் சர்மா 60 பந்துகளில் 109 ஓட்டங்களைக் குவித்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிபில் மும்பை அணி 1 விக்கெட் இழப்பிற்கு 182 ஓட்டங்களைக் குவித்தது.

183 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு அணித் தலைவர் காம்பீர் முதல் ஓவரிலேயே ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார்.

அடுத்து பிஸ்ஸா ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார்.


பொறுப்பாக ஆடி வந்த கலிஸ் உடன் ஜோடி சேர்ந்த திவாரி 27 ஓட்டங்கள் எடுத்த நிலையில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

இறுதியில் கலிஸும் 79 ஓட்டங்களைச் சேர்த்துக் கொடுத்து வெளியேற, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிபில் கொல்கத்தா அணி 4 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களையே எடுத்தது.

இதனையடுத்து மும்பை அணி 27 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ரோகித் சர்மா தெரிவானார்.

# டில்லியை 9 விக்கெட்டுகளால் வீழ்த்தி சென்னை இலகு வெற்றி




ஐ.பி.எல். போட்டித் தொடரின் 59-வது லீக் ஆட்டம் சென்னையில் உள்ள சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

இதில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதனையடுத்து டில்லி அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக வீரேந்திர சேவாக்கும், டேவிட் வோர்னரும் களமிறங்கினர்.

முதல் ஓவரை பென் ஹில்பெனாஸ் வீசினார். இந்த ஓவரிலேயே 5-வது பந்தை எதிர்கொண்டபோது ஸ்டம்பை பறிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஆட்டத்தின் மூன்றாவது ஓவரை வீசிய ஹில்பெனாஸ், தான் வீசிய முதல் பந்திலேயே வோர்னரை ஆட்டமிழக்கச் செய்தார்.

ஆட்டத்தின் 5-வது ஓவரை வீசிய ஹில் பெனாஸ் இந்த ஓவரின் கடைசிப் பந்தில் நாமன் ஓஜாவை வெளியேற்றினார்.

மறுபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் ஒருபுறம் நின்ற ஜெயவர்த்தனவை அல்பி மோர்கல் வெளியேற்றினார்.

இதனால் டில்லி அணி 6 ஓவர்களில் 27 ஓட்டங்களை எடுப்பதற்குள் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. இவர்களையடுத்து வேணுகோபால் ராவும் யோகேஷ் நாகரும் ஜோடி சேர்ந்தனர்.

வேணுகோபால் ராவும் 27 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, டில்லி அணி 20 ஓவர்கள் முடிபில் 5 விக்கெட்டுகளை இழந்து 114 ஓட்டங்களையே எடுத்தது.

இதனையடுத்து 115 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் பதிலெடுத்தாடக் களமிறங்கியது சென்னை அணி.

சென்னை அணியின் ஆரம்ப துடுப் பாட்ட வீரர்களாக மைக் ஹசியும் முரளி விஜயும் களம் புகுந்து அடித்தாடினர். ஆனால் ஹசி 38 ஓட்டங்களில் ஆட்ட மிழந்து வெளியேற அடுத்து ரெய்னா களம் புகுந்தார்.

ரெய்னா-விஜய் ஜோடி 15.2 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

இதனால் சென்னை அணி 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஹில்பெனாஸ் தேர்வானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டிகள்:**
மாலை 4 மணிக்கு ஜெய்ப்பூரில் நடைபெறும் போட்டியில் புனே வாரியர்ஸ் அணி எதிர் ராஜஸ்தான் றோயல்ஸும், இரவு 8 மணிக்கு சண்டிகரில் நடைபெறும் போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் எதிர் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதுகின்றன.

# மக்கள் எழுச்சி கொண்டால்...

கட்சியை கிழக்கு மாகாணத்தில் வளர்ப்பதற்கு இங்குள்ள ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடிமட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் புனரமைப்பு வேலைகள் இடம் பெற வேண்டும். கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் அடையாளம் இல்லாமல் போய் விட்டது. ஒரு காலத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் முஸ்லிம் முக்கியஸ்தர்கள் இருந்துள்ளனர். இதே போன்றுதான் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு தேர்தல் தொகுதியிலும் முக்கியஸ் தர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்துள்ளனர்.

எதிர்காலத்தில் கிராம மட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியினை வளர்த்து அரசாங்கத்தை மாற்ற நாம் அனைவரும் அணி திரள வேண்டும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் உட்பட அனைத்து தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடைய செய்ய வேண்டும். இதற்காக கட்சிக் கிளைகளை புனரமைத்து கட்சியை வளர்க்க வேண்டும். கிழக்கு மாகாண சபைத் தேர்தலை சந்திப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

ஒரு போதும் ஐக்கிய தேசிய கட்சி கிழக்கு மாகாண சபை கலைப்புக்கு எதிராக நீதிமன்றம் செல்லாது. எந்த தேர்தலையும் நாம் சந்திப்பதற்கு ஆயத்தமாகவுள்ளோம். வாக்களிப்பு நிலையங்கள் தோறும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு பின்னர் கிராம ரீதியாக மற்றும் பிரதேச ரீதியாக கிளைகளை அமைக்க வேண்டும் என்றார். (எ-11)

# பீரிஸ் தலைமையிலான குழு...

அமெரிக்காவில் நான்கு நாட்கள் தங்கியிருக்கவுள்ள வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தலைமையிலான அரச தரப்பு குழுவினர் அந்நாட்டின் இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதன்போது அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனிடம், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்ட வரைபைக் கையளித்து பீரிஸ் தலைமையிலான குழுவினர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் மற்றும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முழுமையான செயற்திட்ட வரைபு போன்றவற்றை மையப்படுத்தியே பீரிஸுடனான பேச்சுவார்த்தையினை ஹிலாரி கிளின்டன் முன்னெடுக்கப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உயர் அதிகாரிகளையும் சந்தித்து அரசதரப்பு குழுவினர் விளக்கமளிக்க உள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பாக பேசுவதற்காகவும் அதற்கான பொறுப்புணர்வுடனுமே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அமெரிக்கா வரவேண்டும் என அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் ஊடகவியலாளர்களை சந்தித்தபோது கூறியிருந்தார்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தலைமையிலான அரச தரப்புக் குழு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை அமெரிக்கா செல்லவுள்ளது. இக் குழுவில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன மற்றும் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோர் இடம் பெற்றுள்ளமை தெரிந்ததே. (எ-11)


# நன்றிகள்

## றோசபெல்லா மகிழ்மலர் சபாரத்தினம்



அன்னையின் மடியில் 25.06.1924

ஆண்டவன் அடியில் 03.05.2012

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு மிக அருமையானது - சங்கீதம் 116 : 15

அன்பு, பண்பு, பாசம், அமைதியாக வாழ்ந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்த அன்னையின் இறுதி அஞ்சலி ஆராதனையை வழிநடத்திய குருமார்களுக்கும், சமூகம் தந்தவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியவர்களுக்கும், அன்னையின் அந்திமப் பயணத்தில் எங்களை உங்கள் ஜெபத்தில் தாங்கி, உதவிக்கரம் நீட்டி செயலாற்றிய பரிசுத்த இம்மானுவேல் திருச்சபைக்கும், பலவிதத்திலும் உதவிய ஏனையோருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி நவில்கின்றோம்.

றோஸ் கொட்டேஜ்,
உருப்பிராய்.

- குடும்பத்தினர்

(C-6595)


# யாழ். வந்த...

22 பேர் இம்மாத முற்பகுதியில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவ் 22 பேர்களில் 09 பேர் யாழ் மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள். இதில் ஒருவருக்கே மூளை மலேரியாத் தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி நாவற்குழியினைச் சேர்ந்த குறித்த குடும்பஸ்தர் வீடு திரும்பியதனையடுத்து திடீரென காய்ச்சல் ஏற்பட்டு 3 நாட்களின் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியு பரிசோதனைகளின் பின்னர் குறித்த குடும்பஸ்தருக்கு மூளை மலேரியாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருப்பி அனுப்பப்பட்ட 22 பேர்களில் 09 பேர் யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களில் ஒருவர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மலேரியாத் தொற்று இனங்காணப்பட்டு உள்ள போதும் மற்றைய 8 பேருக்கு மருத்துவ பரிசோதனைகள் எவையும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(எ-4)

# மர்மப்பொருள்...

கிடங்கினுள் காணப்பட்ட குப்பையினை கொளுத்தியபோது, அதில் காணப்பட்ட மர்மப் பொருள் வெடித்ததிலேயே சிறுவன் படுகாயமடைந்துள்ளான்.

இது குறித்து பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். (எ-11)

# திருமலையில்...

இவர்கள் கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் உறவினர்களுக்கு பற்றுச் சீட்டும் அப்போது வழங்கப்பட்டிருந்தது.

விடுதலையாகி வீடு திரும்பியவர்களின் தகவல்களின்படி 13 பேர் புனர்வாழ்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் 21 பேர் வீடு திரும்பியுள்ளதாக கூறப்படுகின்றது.

வீடு திரும்பியவர்களில் 7 வயதுச் சிறுவனுடன் அழைத்து ச் செல்லப்பட்ட தாயும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)


**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

**வாரநாள் புதிய பிரிவு**
**14.05.2012 திங்கள் கிழமை**

பிரிவு 1 : காலை 9.00 – 10.00
பிரிவு 2 : மாலை 3.00 – 4.00

காலம் : 3 மாதம் கட்டணம் : ரூபா 3000 மட்டும்

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்தோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் வகுப்பில் கலந்துகொள்ளலாம்.

பயிற்சி பற்றி அறிந்துகொள்ள முதல் வகுப்பில் இலவசமாக கலந்துகொள்ளலாம்.

14.05.2012 திங்கள் கிழமை பதிவுசெய்வோருக்கு ரூபா 500 பெறுமதியான புத்தகம் இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456

**Elephant House Ice cream**

**விற்பனை முகவர் மாற்றமும் விற்பனையும்**

Elephant house Ice Cream mobile Agent, Ice cream விற்பனைக்கு ஏற்ற ஐந்து முச்சக்கர வண்டியும் ஒரு Ice van னும் உட்பட பல பொருட்களுடன் விற்பனைக்கு உண்டு. மேலும் நிர்வாகக் கணக்காளர் ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு: 56, மணிக்கூட்டு வீதி,
நீராவியடி.
0779910154
0214918407 (8448)

**மணல்**
**விற்பனைக்குண்டு**

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில். (8440)

4 ரெக்டர் - 23000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499

**வேலை ஆட்கள் தேவை**

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு

1) விற்பனையாளர்
2) சிட்டை எழுதுனர்
3) கணக்காளர்
4) மேற்பார்வையாளர்
5) கணனி அறிவுள்ளவர்கள்
6) தொலைபேசி திருத்துனர், (Software and Hardware)

இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்

அனுபவமுள்ளவர்களுக்கான சம்பளம்: ஆண்களுக்கு 12000/=
பெண்களுக்கு 8000/=

நொக்கியா விற்பனை நிலையம்
இல.09, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0773611282
0212223817 (C-6583)

**“சட்ட மாற்றத்தின் முன் நாம் முந்திச் செல்வோம்”**

**ஜூன் (30) உடன் ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா நிபந்தனைகள் அரசாங்கத்தால் மேலும் இறுக்கமாகின்றன.**

எனவே இம் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெற விரைந்து வாருங்கள்
(இவ்விடயத்தை இணையத்திலும் பார்வையிடலாம்)

**திசைகாட்டி** (பிறைவேற்) லிமிடெட் (PV82703).



இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 221 9016 (C-6584)

கிளைகள்:
115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 021 2285544
இல. 22A, பிரங்பெட் பிளேஸ், பம்பலப்பிட்டி. 0112508443
504, Hampton Street, Melborne, Australia.
0061390437100

**அர்ச்சகர் தேவை**

பேராதனைப் பல்கலைக்கழகக் குறிஞ்சிக்குமரன் ஆலய நித்திய விஷேட கருமங்களுக்காக பிரதம குரு உடனடியாக தேவையாகவுள்ளது. பல்கலைக்கழகத்தில் தனி வீட்டு வசதி வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
விண்ணப்பிக்க விரும்புவோர் சுய விபரங்களுடன் விண்ணப்பங்களை கீழ் வரும் முகவரிக்கு 25.05.2012 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

செயலாளர்,
பொறுப்பாண்மைக்குழு, குறிஞ்சிக்குமரன் கோயில்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
தொடர்புகளுக்கு : 0773558333, 0777663709 (8438)

## ஆலயத்துள்...

பிள்ளையார் ஆலயத்திலும், பொற்பதி கோணாவளை வீதியிலுள்ள ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்திலும் இடம்பெற்றுள்ளது.

இக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கோணாவளை துர்க்கையம்மன் ஆலயத்தின் கூரைப் பகுதியில் காணப்பட்ட திறந்த வெளியினூடாக உள் இறங்கிய கொள்ளையர்கள் திருப்பணி அறையின் கதவினை உடைத்து அங்கிருந்த 15 ஆயிரம்ரூபாய்பணத்தினை எடுத்ததோடு மூலஸ்தானத்தின் தெற்கு வாசல் கதவினை உடைத்து ஆதி மூல விக்கிரகத்தினை கிளப்பி அதன் கீழ் இருந்த ஒரு பவுன் தாலிப் பொட்டு, தாலி, பென்ரன் என்பனவும் அம்மனுடைய 2 தங்கச்சங்கிலி, வெள்ளி முடி, 1 1/2 அடி உயரமான ஐம்பொன்னாலான அம்மனுடைய சூலம் என்பனவும்கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இக் கோவிலில் 4 இலட்சம் பெறுமதியான நகைகள், பணம் கொள்ளையடிக்கப்பட்டதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

கொள்ளைமுயற்சி இடம்பெற்ற மற்றொரு கோவிலான பொற்பதி பிள்ளையார் கோவிலில் எவ்வித பொருட்களோ நகைகளோ களவாடப்படவில்லை.

எனினும் இக்கோவிலில் ஆலயத்தின் மகிமையின் தூய்மைக்குபங்கம்விளைவிக்கும் நோக்கமாக கோயிலின் உட்புறத்தில் வடமேற்கு மூலையிலுள்ளமுருகன் ஆலயத்திற்கு அருகில் மலசலம்கழிக்கப்பட்டுஉள்ளது.

ஆதிமூலத்திற்குள் நுழைந்து அங்கிருந்த பூசைப் பொருட்கள், திருவாசி, விளக்குகள் என்பனதூக்கியெறியப்பட்டதோடு விக்கிரகத்தினை புரட்டும் முயற்சியும் இடம்பெற்றுள்ளது.

இக் கொள்ளை சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்திய பின் சம்பவ இடத்திற்கு சென்ற கோப்பாய் பொலிஸார்கைரேகைகளை பதிவு செய்ததுடன் விசாரணைகளினையும்மேற்கொண்டுவருகின்றனர்.

மேலும் குறித்த இருகோவில்களிலும் இடம்பெற்ற ஆலயத்தின் தூய்மைக்கு பங்கம் விளைவிக்கின்ற செயல்களினால் இந்துக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.(எ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி தர்மரத்தினம் (ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர்)



விழிசிட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தர்மரத்தினம் (10-05-2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரவப்பிள்ளை-பவானிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி-செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மரத்தினத்தின் அன்பு மனைவியும், வடிவாம்பிகை, ஜானகி, தவமணிதேவி ஆகியோரின் சகோதரியும், கதிர்காமத்தம்பி, வல்லிபுரநாதன், ஆகியோரின் அன்பு மைத்துனியும், குகதர்மினி (ஆய்வாளர், ஒஸ்லோ பல்கலைக்கழகம், நோர்வே), அருட்செல்வி (இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயும், அஜாதேவி, அருள்மொழி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், மாகாந்தன், மாரமணன் ஆகியோரின் அன்புப் பெரியதாயும் ரவீந்திரன், சிவபாலசுந்தரம் ஆகியோரின் மாமியாரும், குலேஷ், ஹிஷாணி, நிதர்சனன், ஆர்த்திகா, அபர்ணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-05-2012) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விழிசிட்டி கொப்பிலாவிடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகளிர் கல்லூரி மேற்கு வீதி, உடுவில். (C-6585) தகவல்: குடும்பத்தினர்

**மாதம் 50,000 ரூபா**
**வருமானத்துடனான வெளிநாட்டுக் கல்வி!**



UK, Australia & Malaysian Certified
**Hospitality Management**

மலேசிய அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழான பயிற்சிநெறி

முதல் 3 மாதம்
English & Skillls Training

அடுத்த 9 மாதங்கள்
50,000 ரூபா வருமானத்துடன் கூடிய தொழிற்பயிற்சி

உணவு, தங்குமிட வசதி இலவசம்!

பயிற்சிநெறி முடிவில்
**Skills Malaysia Invite, City & Guilds** (UK), **AETS** (Australia)
சான்றிதழ்களுடன்,
**மலேசியா அல்லது சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு!**

- 9ம் வகுப்பு வரையில் படித்த, 18-45 வயதுக்கு இடைப்பட்ட எவரும் இணைந்துகொள்ளலாம்.
- விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஒரு மாதத்தில் பயண உத்தரவாதம்!
- விசா ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நேரடியாக மலேசியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சி நிறுவனத்தில் இணைக்கப்படுவர்.
- பயிற்சிநெறிக் காலத்தில் நேரடிக் கண்காணிப்பு மற்றும் உதவிகள்.

**முதல் அணியில் 30 பேருக்கு மட்டுமே வாய்ப்பு**
ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்!

**நேரடி விளக்கக் கருத்தரங்கு மற்றும் Spot Admission!**

19-05-2012 காலை 10.00 மணி
யாழ் ஞானம்ஸ் ஹொட்டேல்

மே 25, 26, 27, 28 இல் | கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் நேரடி கருத்தரங்கு மற்றும் அனுமதி.

MEDIA

**சிகரம்** கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 8060 நேரடி: 0773 616 798

**திருமண அழைப்பிதழ்களின் தாயகம்**

**கஜசங்கவி சென்ரர் & கஜசங்கவி பிறிண்டேர்ஸ்**

இல.237, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C-6592)
தொ.பே. : 021 222 7885

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.